யாழ் மாவட்டத்தின் அண்மைக்கால

# தொல்லியல் ஆய்வும் ஆதிக்குடிகளும்

மறு பிரசுரம்:

**"செந்தழல்"**

தமிழ் மன்றம் யாழ் பல்கலைக் கழகம்

- 1982 -

ஆசிரியர்:- பால மனோகரன்



ஆக்கியோன்:-

கலாநிதி சி. க. சிற்றம்பலம்

தொல்லியல் விரிவுரையாளர்

யாழ் பல்கலைக் கழகம்,

திருநெல்வேலி.


யாழ்ப்பாண மாவட்டம்
வல்லிபுரம்
குடத்தனை
அம்பன்
நாகர் கோவில்
குடாரப்பு
செம்பியன்பற்று
வெத்திலைக்கேணி
முள்ளியான்
சுண்டிக்குளம்
கந்தரோடை
ஆனைக்கோட்டை
வேரப்பிட்டி
புளியந்துறை
வெட்டுக்காடு
வெடியரசன் கோட்டை
நெடுந்தீவு
வ
10 5 0 5 10 மைல்
ஆதிகாலக் குடியிருப்புக்களின்
எச்சங்கள் காணப்படும்
பிரதான தொல்லியல் தலங்கள்

# யாழ் மாவட்டத்தின் அண்மைக்கால
# தொல்லியல் ஆய்வும் ஆதிக்குடிகளும்

கலாநிதி. சி. க. சிற்றம்பலம்
(தொல்லியல் விரிவுரையாளர்)
யாழ் பல்கலைக் கழகம்

மனித வரலாற்றைக் கட்டியெழுப்ப உதவும் சாதனங்களில் வரலாறு, தொல்லியல் போன்ற துறைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இவற்றில் வரலாற்று நூல்களோ வரலாற்று ஆசிரியரின் மனோபாவத்திற்கேற்ப திரித்தும் மாறுபட்டும் பல கருத்துக்களைக்கூற தொல்லியல் சான்றுகளோ எனில் அன்றாட மக்கள் தமது வாழ்வில் உபயோகித்த பொருட்களாக இருப்பதால் வரலாற்று நூல்களை விட மனித வரலற்றைக் கட்டி எழுப்பும் கருவிகளில் தொல்லியல் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இதனால் தொல்லியல் சான்றுகள் ஏனையவற்றை விட மனித வரலாறு பற்றிய ஆய்வில் தனி இடத்தை வகிக்கின்றன என்பது வெள்ளிடைமலை.

தென்னாசியாவில் குறிப்பாக இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் ஆங்கிலேயரின் வருகை 19-ம் நூற்றாண்டில் தொல்லியல் ஆய்வில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. இருந்தும் இலங்கையில் ஆரம்ப கால நடவடிக்கைகள் அநுராதபுரம், பொலனறுவை போன்ற தலைநகர்களை மையமாக வைத்தே மேற்கொள்ளப்பட்டன. இதற்கான காரணங்களும் இல்லாமல் இல்லை. இப்பகுதிகளில் மலிந்துகிடந்த தொல்லியல் சான்றுகளின் அழிபாடுகள் முக்கியமாகக் கட்டிடங்களும் ஒரு பிரதான காரணிகளாக அமைந்தன. இத்தகைய பழைய கட்டிடங்களின் அழிபாடுகள் இவ்விதம் இங்கு மலிந்து காணப்படுவதற்கு இவை வெவ்வேறு காலகட்டங்களில் இலங்கையின் இராசதானியாக விளங்கியதும் அவ்வப்போது அரச ஆதரவுடன் கட்டிடங்கள் கட்டுவதற்கு ஏற்பட்ட வாய்ப்பும் இறுதியாகப் பௌத்தமதம் இப்பகுதிகளில் பெற்ற செல்வாக்கும் முக்கிய காரணங்களாகும். அத்துடன் இராணுவ நடவடிக்கைகளில் இப்பகுதி ஊடாகச்சென்ற பிரித்தானிய இராணுவத் தளபதிகள் ஆகியோர் தம் கடமைகளுடன் இச்சான்றுகளையும் தமது குறிப்புகளில் எடுத்துக்காட்டத்

தவறவில்லை. பாளிநூல்கள்பற்றிய ஆய்வுகள் இக்கால கட்டத்தில் தலைஎடுத்ததால் இப்பகுதிகள்பற்றி அறியவேண்டும் என்ற அவாவும் ஆங்கிலேயரைத் தூண்டிய காரணிகளில் ஒன்றாகும். இறுதியாக இப்பிரதேசங்களில் மலிந்து காணப்படும் கருங்கற் பாறைகள் இவ்விதபடைப்புக்களை இலேசாக ஆக்குவதற்கு உதவிய காரணிகளில் ஒன்று எனக்கூறினாலும் பிழையாகாது. எவ்வாறாயினும் இலங்கை வரலாற்றில் கட்டிடங்களை அழிப்பதிலும் மக்களை மதம் மாற்றுவதிலும் பெயர்பெற்ற போத்துக்கேயர் இந்நாட்டில் கால்வைத்தபோது இப்பகுதிகள் பாழடைந்த கவனிப்பாரற்ற பிரதேசங்களாக விளங்கியதும் இச்சின்னங்கள் காலவெள்ளோட்டத்தில் தப்பிப்பிழைப்பதற்கு வசதியாக அமைந்ததும் மறுப்பதிற்கில்லை.

ஆனால் யாழ் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் இங்கு நிலைபெற்ற தமிழ்பேரரசு கி. பி. 1619-ம் ஆண்டில் போர்த்துக்கேயரால் வெற்றி கொள்ளப்பட்டபோது இவ்வரசின் கலைச்சின்னங்கள் வரலாற்று ஏடுகள் ஆகியன அவ்வெறியரின் கொடிய கரங்களிலிருந்து தப்பிப்பிழைக்கவில்லை. இவ்வரசின் பல கட்டிடங்களைச் சிதைத்த இவர்கள் அவற்றைத் தமது கட்டிடடங்களைக் கட்டப் பயன்படுத்தியதால் இத்தமிழரசின் பல கல்வெட்டுக்கள்கூட அழிக்கப்பட்டிருக்கலாம் என எண்ணத் தூண்டுகிறது. இவ்வரசின் சின்னமாக சங்கிலித்தோப்பு ஒன்று மட்டும் அஃதாவது 13-ம் நூற்றாண்டின் பிற்பகுதி தொட்டு 17-ம் நூற்றாண்டின் முற்பகுதிவரை தற்போதைய வடகிழக்கு மாகாணங்களையும் புத்தளம் சிலாபம் ஆகிய பகுதிகளையும் உள்ளடக்கித் தனிக்கொடியுடன் அரசுசெலுத்திய இப்பேரரசின் சின்னமாகமட்டும் விளங்குவது ஒரு துர்ப்பாக்கிய நிலையாகும். போத்துக்கேயரின் கொடூரக் கரங்கள் மட்டுமல்லாமல் நம்மவர் மத்தியில் அருகிக் காணப்படும் வரலாற்று பாரம்பரியஉணர்வும் இத்தகைய தொல்லியல் சான்றுகள் அருகிக் காணப்படுவதற்கான காரணிகளில் பிரதானமானவை என்பது மறுப்பதற்கில்லை. வெளிமாவட்டங்களோடு ஒப்பிடுகையில் இம்மாவட்டத்தில் ஏனையவற்றில் கிடைப்பதுபோன்று கருங்கற் பாறைகள் இருக்காததால் அழிவற்ற பல கட்டிடங்களைக் கட்டமுடியவில்லை என்ற காரணத்தை பலர்கூறினாலும்கூட பண்டைய இப்பேரரசின் சின்னமாய் விளங்கிய இதன் தலைநகராகிய நல்லூர் இராசதானி பற்றிக்கூட நம்மவர் அறிந்துகொள்ள முடியாதநிலை உண்மையில் ஒரு துர்ப்பாக்கிய நிலையாகவே காணப்படுகிறது.

இவ்வாறு நோக்கும்போது யாழ்மாவட்டம் மட்டுமன்றி பொதுவாக வடமாகாணமே கூட தொல்லியல் துறையில் ஒரு புறக்கணிக்கப்பட்ட மாவட்டமாகக் காணப்படுகிறது. இம்மாகாணம்பற்றி ஆங்கிலேயர் வெளியிட்ட நூல்களில் இரண்டே இரண்டுதான் ஓரளவு இதன் பழமையைக் கூறுகின்றன. இவற்றுள் லூயிஸ் 1895-ல் வன்னிபற்றி எழுதிய நூலும் (*Lewis J. P. 1895*) போக் என்பவர் 1888-ல் மன்னார் பற்றி எழுதிய நூலும் (*Boake W.J.S.1888*) குறிப்பிடத்தக்கவை. இவற்றில் முன்னையது வன்னிமாவட்ட சமூக பொருளாதார தொல்லியல் அம்சங்களை விவரிக்க பின்னையது மன்னார் மாவட்ட இடப்பெயர்களை வெறுமனையே விபரிக்கும் ஒருநூலாக அமைவதால் இவைகூட எமது மாவட்டவரலாறு தொல்லியல்பற்றிய ஆய்வில் ஏனைய பிராந்தியங்களோடு ஒப்பிட்டு நோக்கும்போது வேண்டிய தகவல்களை தருவனவாக அமையவில்லை.

இம் மாவட்டத்தில் தமிழ்ப் பேரரசு நிலைத்த காலத்தின்பின்பு எழுதப்பட்ட இலக்கியநூல்களாகிய யாழ்ப்பாண வைபவமாலை, கைலாயமாலை, வையா பாடல் ஆகியனவும்கூடத் தமிழ்ப்பேரரசின் வரலாறு பற்றியறிய உதவும் பிரதான சான்றுகளாக இருந்தாலும்கூட இப்பிரதேசத்தின் ஆதிக்குடியேற்றம் பற்றிப் போதியளவு தகவல்களைத் தரவில்லை.

காரணம் இவை எதுவித காலவரன்முறையின்றி வெறும் கட்டுக்கதை அம்சங்கள் சிலவற்றைக் கொண்டிருப்பதே. இந்நூல்கள்கூறும் யாழ்பாடி கதைகூட இம்மாவட்டத்தின் ஆதிக்குடியேற்றம் கி. பி. 9-ம் நூற்றாண்டிலேதான் நடந்தது என்பதை

எடுத்துக்காட்டுகிறது. இக்கதையைத் துருவி ஆராய்ந்தால் யாழ்ப்பாணம் என்ற பிர தேசத்தின் பெயரை விளக்க 16-ம் நூற் ருண்டில் வாழ்ந்த அந்தகக் கவிவீரராகவர் என்ற புலவரை மையமாகவைத்து எழுந்த புனைகதை என்பது புலனுகின்றது. இவ்விதம் இக்காலத்தில் வளர்ச்சிபெற்ற உக்கிரசிங் கள மதருதப்புரவல்லி கதைகளிலிம் விஜ யன் கதையின் சாயல்படிந்திருப்பதால் எவ் வாறு விஜயன்கதை இந்நாட்டில் ஏற்பட்ட ஆதிக்குடியேற்றத்தை விளக்க மிகமிகப் பிற்பட்ட காலத்தில் சிருஷ்டிக்கப்பட்டதோ அவ்வாறே உக்கிரசிங்கன் மாருதப்புரவல்லி கதைகளும் யாழ்ப்பாணத்தில் தோன்றி வளர்ச்சிபெற்ற ஒரு தனிப்பேரரசின் தோற் றத்தைப்பற்றி மக்கள் நம்பிய கட்டுக்கதை களாகவே காணப்படுகின்றன.

இதே நேரத்தில் தமிழ்நூல்களை மைய மாகவைத்து இம்மாவட்டத்தில் எழுதப் பட்ட பல நூல்களும் இம்மாவட்டத்தின் ஆதிக் குடியேற்றம்பற்றிய சான்றுகளைத் தரத் தவறிவிட்டதோடு இக்குடியேற்றம் பற்றிக் கட்டுக்கதைகளையே தருகின்றன. இவ்வரிசையில் சைமன் காசிச்செட்டி (1847 —1848) ஜோன் (1879) சதாசிவம்பிள்ளை (1884) முத்துத்தம்பிப்பிள்ளை (1912) வேலுப்பிள்ளை (1918) ஆகியோர் எழுதிய நூல்கள் குறிப்பிடத்தக்கவை. இருந்தும் இம்மாவட்டம்பற்றி முதலியார் இராசநா யகம் (1926) சுவாமி ஞானப்பிரகாசர் (1928ல்) ஆகியோர் எழுதிய நூல்களே முன்னையவற்றைவிட ஒருபடி முன்னேறிக் காணப்பட்டாலும்கூட ஆதிக்குடியேற்றம் பற்றி அறிவதற்கு நமக்குப் போதியஅளவு உதவவில்லை என்றே கூறவேண்டும்.

முதலியார் இராசநாயகத்தைவிட ஞானப்பிரகாசர் விஞ்ஞான முறையில் வர லாற்றை ஆய்வதில் தேர்ச்சிபெற்றிருந்தார் என்பதை இச்சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூறு மல் இருக்கமுடியாது. இருந்தும் இராசநாய கம் அவர்கள் இப்பிராந்தியத்தில் கி.மு. 15ம் நூற்றுண்டிற் தனியரசு ஒன்று இருந்தது என் றும், ஞானப்பிரகாசர் இவ்வரசு கி. பி. 7ம் நூற்றுண்டு தொட்டு இப்பகுதியில் தோன்றி வளர்ச்சிபெற்றதென்றும் கூறும் கருத்துக் கள் தொல்லியற் சான்றுகளால் நிரூபிக்கப் படவேண்டிய தொன்று என்பதை நாம் கருத்தில் கொள்ளல்வேண்டும்.

இதனுல் இம்மாவட்ட ஆதிக் குடியேற் றம்பற்றிய ஆய்வில் முழுக்க முழுக்க தொல் லியற் சான்றுகளிலே நாம் தங்கி இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது. இத் தொல்லியல் சான்றுகளிலும்கூட ஏற்கனவே நாம் குறிப்பிட்டவண்ணம் இறுதிக் காலக் கட்டிடங்கள்பற்றிய தகவல்கள் மிக மிகக் குறைவாகவே காணப்படுகின்றன.

கல்வெட்டுக்களோ எனில் இம்மாவட் டத்தில் கிடைத்த மிகப் பழைய தமிழ்க் கல் வெட்டுக்களும் கி. பி. 11ம் நூற்றுண்டைச் சேர்ந்த சோழர் காலத்தவையே. யாழ்ப் பாண ராஜ்யத்தில் செங்கோலோச்சிய தமிழ் மன்னர் கல்வெட்டு ஒன்றுகூட இற்றை வரை இப்பிராந்தியத்தில் கிட்டவில்லை என் பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் வெளி யிட்ட கல்வெட்டுகளில் ஒன்றே ஒன்றுதான் அதுவும் இம்மாவட்டத்திற்கு வெளியிலுள்ள கேகாலை மாவட்டத்தில் கிடைத்துள்ளது.

இருந்தும் இப்பிராந்தியத்தில் நாட்டின் ஏனைய மாவட்டங்களைப்போல் இயற்கை யான கருங்கற் குகைகள் இல்லாததால் ஏனையவற்றில் காணப்படுவதுபோன்று இங் கும் இந்நாட்டு ஆதிக் கல்வெட்டு மொழியா கிய பிராமி மொழிக் கல்வெட்டுக்கள் காணப்படவில்லை என்ற காரணத்தைக் கூறிய பரணவித்தான, இங்கு கல்வெட்டுக் கள் காணப்படவில்லை என்ற ஒரு காரணத் திற்காக இங்கு சிங்களவர் ஆதியில் குடியேற வில்லை எனக் கூறமுடியாது என்று சொல்லத் தவறவில்லை. (Paranavitane 1970)

குகைக் கல்வெட்டுக்கள் காணப்படா விட்டாலும்கூட இப்பிராந்தியத்தில் பிரா மிக் கல்வெட்டுக்கள் வழக்கிலிருந்த காலத் தில் பிராமி மொழி கூட மக்கள் மத்தியில் வழக்கிலிருந்தது என்பதை கடந்த ஆண்டு ஆனைக்கோட்டையில் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறையினர் மேற்கொண்ட அகழ்வின்போது கிட்டிய வெண்கலத்திலு லான ஒரு முத்திரையும், கந்தரோடையில் கிடைத்த பிராமி மொழியில் எழுதப்பட்ட

மட்பாண்டங்களும் கிறிஸ்துவுக்குப் பின்பு 2ம் நூற்றாண்டைச் சேர்ந்த வல்லிபுர பொற் சாசனமும் நாட்டின் ஏனைய மாவட்டங் களைப் போன்றே இங்கும் மக்கள் பிராமி மொழி வரி வடிவத்தை அறிந்திருந்தனர் என்பதையும் எடுத்துக் காட்டியுள்ளன.

இத்தகைய சான்றை இப்பிராந்தியத் தில் கண்டெடுக்கப்பட்ட நாணயங்களும் உறுதிப்படுத்துகின்றன. இந்நாணயங்களில் ('புராண') என அழைக்கப்படும் நாணய வகை இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளின் ஆதி நாணயங்களாகும். இத்தகைய நாண யங்கள் கி. மு. 3ம் நூற்றாண்டு தொடக்கம் இப்பிராந்தியங்களில் வழக்கிலிருந்திருக்க லாம் என அறிஞர் கருதுவர். கந்தரோடை, வல்லிபுரம் ஆகிய இடங்களில் இந்நூற்றாண் டின் ஆரம்பத்தில் இவை கண்டுபிடிக்கப் பட்டன.

அண்மையில் நாம் மேலாய்வுக்குக் குடத்தனை சென்றபோது இத்தகைய நாண யம் ஒன்றை எமது குழுவில் ஒருவரான திரு. தேவராசா அவர்கள் கண்டுபிடித்தமை குடத்தனையையும், வல்லிபுரம், கந்தரோடை போன்று ஒரு தொல்லியற் களஞ்சியமாக மாற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்நாணய வகையைத் தொடர்ந்து கிறிஸ்துவின் ஆரம்பகாலத்தில் வெளியிடப் பட்ட நாணயங்கள்தான் குத்தப்பட்ட இலச்சினைகள் ஒன்றாக உருவாக்கப்பட்ட நாணயங்களாகும் (Diestruck-Coins). இவை ஏற்கனவே கந்தரோடை போன்ற இடங்களில் சேர் போல் பீரிஸ் போன்றோ ரால் அடையாளம் காணப்பட்டது குறிப் பிடத்தக்கது.

கடந்த ஆண்டில் இப்பகுதிக்குத் தொல் லியல் ஆய்வு மேற்கொள்ளச் சென்ற நாமும் இத்தகைய நாணயமொன்றைக் கிணறு வெட்டிய மண்ணை அரித்தபோதுபெற்றோம். இத்தகைய நாணயங்கள் கிறிஸ்துவுக்கு முற் பட்ட காலம் தொடக்கம் கி. பி. 3ம் நூற் றாண்டுவரை இந்தியா, இலங்கை போன்ற பிராந்தியங்களில் வழக்கிலிருந்தன. இவற் றைத் தொடர்ந்து ரோம, அராபிய, சீன, சிங்கள மன்னர் ஆகியோரின் நாணயங்களும் இறுதியாக யாழ்ப்பாண பேரரசின் நந்தி பொறித்து 'சேது' என ஒரு பக்கத்தில் எழு தப்பட்ட நாணயங்களும் இம்மாவட்டத் தின் வரலாற்றில் நாணயங்கள்பெறும் முக் கியத்துவத்திற்கு அசைக்கமுடியாத சான்றுக ளாகும். இதைத் தொடர்ந்து போத்துக் கேய நாணயங்களும் டச்சு, ஆங்கில நாண யங்களும் இம்மாவட்டத்தின் பல பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

எனவே, இம்மாவட்டத்தின் ஆதிக் குடி யேற்றம் பற்றிய ஆய்வில் நாணயங்கள் முக் கிய இடத்தைப் பெறுகின்றனஎன்பது வெள் ளிடை மலை. இவற்றோடு இங்கு கண்டெடுக் கப்பட்ட பிராமி மொழியிலமைந்த மட் பாண்ட ஓடுகள், முத்திரை, பொற்சாசனம் ஆகியனவும் இம்மாவட்ட வரலாற்றில் தனி இடம் வகிக்கின்றன. கட்டிடங்களைப் பொறுத்தமட்டில் இவை அழிந்தும் அழிக் கப்பட்டாலும்கூட இப்பிராந்தியத்தில் மேற் கொள்ளப்பட்ட அகழ்வுகள் பண்டைய யாழ்ப்பாணத்தின் ஆதிக்குடியேற்றம் பற்றி மிக முக்கிய பிரதான தகவல்களைத் தரு கின்ற சான்றுகளாக அமையுமென்பது குறிப் பிடத்தக்கது.

இவ்வாறு தனியரசு செலுத்திய யாழ். மாவட்டமும் அது உள்ளடக்கிய வடகிழக்கு மாகாணங்களும் 1619ல் வீழ்ச்சி பெற்றாலும் கூட இப்பிராந்தியத்தின் தனிக் கலாசார பாரம்பரியத்தை இங்கு ஆட்சிசெய்த போத் துக்கேயரும் டச்சுக்காரரும் உணர்ந்து இவற்றைப் பேணிப் பாதுகாப்பதில் அக் கறை செலுத்த, பின் வந்த பிரித்தானியர் 1933ம் ஆண்டில் நிர்வாக வசதிக்காக இதை ஒரு மாகாணமாக ஆக்கி ஏனைய மாகாண நிர்வாக அமைப்புக்களுடன் இணைத்தபோது இற்றைவரை இதுபெற்றிருந்த முக்கியமும் சிறப்பும் வலிகுன்றியது வரலாறு.

இத்தகைய ஒரு பிராந்தியத்தின் தொல் லியல் வரலாறு என்ன? பாரம்பரியம் என்ன என்பதே நம்மை எதிர்நோக்கும் கேள்வி யாக அமைகின்றது.

வடமாகாணத்தைப் பொறுத்தமட்டில் மன்னரிலுள்ள திருக்கேதீஸ்வரத்தில் போக் என்பவர் 1887ல் மேற்கொண்ட அகழ்வு தான் முதன் முதலில் மேற்கொள்ளப்பட்ட திட்டமிடப்பட்ட தொல்லியல் நடவடிக்கை யாகக் காணப்படுகிறது.

இவர் இவ்வாய்வில் இப்பிராந்தியம் தென்னகத்திலிருந்து வந்த மக்களால் ஆதியில்குடியேறப்பட்டது என்பதைச் சுட்டிக் காட்டியதோடு இதிற்கிடைத்த தொல்லியல் சான்றுகளில் குறிப்பாக மட்பாண்டங்கள் இலங்கையின் தென்கோடியிலுள்ள திசைமகராமாவில் பாக்கரால் (*Parker 1885*) அகழ்ந்தெடுக்கப்பட்ட மட்பாண்டங்களோடு ஒத்துக்காணப்பட்டுள்ளள எனவும் கூறத் தவறவில்லை. இருந்தும் யாழ்மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் 1917-ம் ஆண்டில்தான் முதன்முதல் திட்டமிடப்பட்ட முறையில் தொல்லியல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வை நடத்தியவர் சேர் போல் பீரிஸ் என்ற அறிஞராகும். (*Paul Pieris* 1917-1919) போக்கைப்போல இவரும் தொல்லியலில் ஈடுபாடுடையவராகக் காணப்பட்டாலும்கூட பயிற்சிபெருத ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. இருந்தும் இவரது கண்டுபிடிப்புக்கள் இம்மாவட்டத்தின் தொல்லியல் பழமையையும் பாரம்பரியத்தையும் பறைசாற்றுவனவாக அமைந்ததோடு இவர்சேகரித்த பழைய நாணயங்கள் இம்மாவட்டம் கிறிஸ்துவிற்குமுற்பட்ட பலநூற்றுண்டுகட்கு முன்பே மக்கள் வாழ்விடமாக விளங்கியது என்பதையும் எடுத்துக் காட்டியது. இவரது ஆய்வின் பெறுபேருக கந்தரோடை, வல்லிபுரம் ஆகிய இடங்கள் இப்பிராந்தியத்தின் தொல்லியல் களஞ்சியங்கள் என்பதும் புலனுகியது.

இச்சந்தர்ப்பத்தில் இவர்கூறிய கருத்துக்கள் மிக மிக அண்மைக் காலத்தில் இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின் பெறுபேருகக் கிடைத்த சான்றுகளைப்பற்றித் தீர்க்கதரிசனமாகக் கூறப்பட்ட கருத்துக்களாக அமைந்ததால் அவற்றை இங்கு நாம் கூறுவது அவசியமாகிறது. இற்றைக்கு அரை நூற்றுண்டுக்கு முன்பே தீர்க்கதரிசனமாக அவர் கூறிய கருத்துக்கள் இவைதான். அப்போது அவர் இந்நாட்டின் சிங்கள மக்களின் மூதாதை என நம்பப்படும் - விஜயன் (கி.மு. 6ம் நூற்றுண்டில்) இந்நாட்டிற்கு அடியெடுத்து வைப்பதற்கு முன்பே வட இலங்கை மக்கள் நடமாட்டத்திற்குச் சிறப்புப் பெற்ற இடமாக இருந்ததென்பதைக் கூறி கிறிஸ்துவை அடுத்த சகாப்தங்களிலும் இதே நிலைதான் காணப்பட்டதென்றும், இலங்கையில் தொல்லியல்நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகத் தொல்லியற் பயிற்சி பெற்றவர் இருக்கும்போது தமிழ்ப் பகுதிகளைப் புறக்கணிக்கமாட்டார் எனத் தாம் நம்புவதாகவும் எடுத்துக்காட்டி, இப்பிராந்தியம் தென்தமிழ்நாட்டு மீனவர்களால் காலையில் மீன்பிடிக்கச் செல்லும்போது தினமும் காணப்படும் ஒரு பகுதியாதலால் அம்மக்கள் கடலில் பிரயாணம் செய்வதுபற்றி அறியத் தொடங்கியதும் இப்பகுதி அம்மக்களால் ஆதியில் குடியேறப்பட்டிருக்கும் எனவும் கூறினர்.

பீரிஸின் தொல்லியல் நடவடிக்கைக்குப் பின்பு கிட்டத்தட்ட அரை நூற்றுண்டுவரை இப்பிராந்தியம் தொல்லியலாளரால் புறக்கணிக்கப்பட்ட பிராந்தியமாகவே காணப்பட்டது. இதற்கும் முக்கியமாக இங்குள்ள அழிபாடுகள் ஏனைய மாவட்டங்களோடு ஒப்பிடுகையில் எண்ணிக்கையில் குறைந்து காணப்பட்டதும், தொல்லியற்றுறையில் "அகழ்வியல்" ஒரு முக்கிய இடத்தைப் பிடிக்காததும், பிரதான காரணிகளாக அமைந்தன.

எவ்வாருயினும் இக்குறைபாட்டை நிவர்த்திசெய்யும் நோக்கமாக 1966ம் ஆண்டில் இலங்கைத் தொல்லியற் துறையினர் இப்பகுதியில் அகழ்வை மேற்கொண்டு இங்கு பல ஸ்தூபிகளின் அழிபாடுகளை வெளிக்கொணர்ந்து அநுராதபுரம் போன்று கந்தரோடையும் பௌத்த மதத்தின் இருப்பிடமாக அமைந்தது எனக் கூறினர். கந்தரோடை ஸ்தூபிகளின் காலம் கி. பி. 5ம்-6ம் நூற்றுண்டுகளே என்பதை நாம் மனதில் கொள்ளல்வேண்டும்.

எவ்வாருயினும் இத்தூபிகளுக்குக் கீழ் உள்ள படையில் வேறு என்ன கலாசார அம்சங்கள் உள்ளன என்பதை அறிய இவர்கள் முற்படவில்லை.

இத்தகையதொரு குறையை 1967-ம் ஆண்டில் இப்பகுதியில் மேலாய்வுநடத்திய திருமதி விமலா பேக்லே என்ற தொல்லியலாளர் நிவர்த்தி செய்தார். (Begley-1967) இம்மேலாய்வின்போது கிறிஸ்துவிற்கு முற்பட்டகால மட்பாண்ட ஓடுகள் இவரால் அடையாளம் காணப்பட்டதுடன் இப்பகுதி நிச்சயமாக அகழ்வு மேற்கொள்ளப்பட வேண்டிய இடம்என இவரை உணரவைத்தது. திருமதி விமலா பேக்லே அவர்களால் கந்தரோடையுடன் வல்லிபுரம், நாகர் கோயில் குடத்தனை ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டமேலாய்வும் இப்பிரதேசங்களின் தொன்மையை விளக்கின. இருந்தும் இங்கே சேகரிக்கப்பட்ட மட்பாண்டங்களைக்கொண்டு இவற்றின் காலத்தைக் கூறுவது கடினம் என்பதை இவர் கூறத் தவறவில்லை. கந்தரோடை அகழ்வுபற்றி குறிப்பிடமுன்பு தொல்லியல் துறையில் ஆர்வங்காட்டிய அறிஞர்களாகிய முதலியார் இராசநாயகமும் (1926) ஞானப்பிரகாச சுவாமிகள் (1928) C. S. நவரத்தினம் (1958) ஆகியோரைக் குறிப்பிடாமல் இருக்கமுடியாது. யாழ் குடாநாட்டின் கிழக்குப்பிரதேசத்தின் முக்கியத்துவத்தை விளக்கினமையே இம்மூவருக்கும் இடையிலே காணப்படும் ஒற்றுமையாகும். உதாரணமாக முதலியார் இராசநாயகம் அவர்கள் ஆரம்பத்தில் வடபகுதியின் தலைநகராக கந்தரோடை (கதிரமலை) விளங்கிப் பின்பு கிழக்குக் கரையிலுள்ள சிங்கை நகரும் இறுதியில் நல்லூரும் விளங்கின என வாதாடினர்.

இவரது கருத்தை ஆதரித்த ஞானப்பிரகாசரும் சிங்கைநகர் கிழக்குக் கரையில் அதுவும் வல்லிபுரத்துக்குக் கிட்டவுள்ள பகுதியில் அமைந்திருந்ததுஎன வாதிட்டனர். எவ்வாறுயினும் யாழ்ப்பாண அரசரின் சேது நாணயங்களில் மன்னர்கள் பெயர் குறிப்பிடப்படாத நேரத்தில் முதல் முதல் இவை யாழ்ப்பாணப் பேரரசின் நாணயங்களென அடித்துக்கூறிய பெருமை முதலியார் இராசநாயகம், சுவாமி ஞானப்பிரகாசர் ஆகியோரையே சாரும் என்பதை நாம் மறக்கமுடியாது. கிழக்குக்கரையில் காணப்படும் தொல்லியல் சான்றுகளை மையமாவைத்து நவரத்தினம் அவர்களும் சிங்கைநகர்பற்றி இவர்கள் கூறிய கருத்தை ஏற்றதோடு சிங்கை நகரிலிருந்து குடாநாட்டின் நடுப்பகுதிக்கு ஒருபிரதானபாதை சென்றிருக்கவேண்டும் எனவும்கூறி அம்பன் நாகர்கோவில்' குடாரப்பு, செம்பியன் பற்று, முள்ளியான், வெற்றிலைக்கேணி ஆகிய இடங்களிலுள்ள தொல்லியற் சின்னங்களையும் குறிப்பிடத்தவறவில்லை.

கந்தரோடை அகழ்வைஅடுத்து அனுராதபுரத்தின் பழைய தலைநகர் பகுதியிலும் அகழ்வு மேற்கொள்ளப்பட்டது. (Deraniya-gala S. 1972) இவ்வகழ்வின்போது இப்பகுதியில் ஆரம்பத்தில் வேடர்களின் முன்னோடிகளாகிய குறுணிக்கற்கால மனிதர் உபயோகித்த கல்லாயுதங்களும், இடைவெளிக்குப்பின்பு பெருங்கற்காலத்தைச் சேர்ந்த கறுப்புச்சிவப்புநிற மட்பாண்டங்களும் இவற்றைத் தொடர்ந்து வரலாற்றுக்கால மட்பாண்டங்களும் ஏனைய சின்னங்களும் வெளிக்கொணரப்பட்டன. இவ்வாய்வை நடத்திய திரு. சிரன் தெரணியாகலை என்ற அறிஞர் இப்பெருங்கற்காலம் கி. மு. 400ம் ஆண்டளவில் இங்கு ஆரம்பித்திருக்கலாம் என்றும் வரலாற்றுக்காலம் கி. மு. 200-ம் ஆண்டில் தொடங்கி இருக்கலாம்எனவும் கருத்து வெளியிட்டார்.

முதன் முதல் பெருங்கற்கால மக்களே இப்பகுதியில் குளந்தொட்டு நெல்விவசாயம் மேற்கொண்டதற்கான சான்றும் கிட்டியது. இவ்வாய்வு பலவிதத்திலும் முக்கியம் பெற்றது. இதன்மூலம் இலங்கையில் முதன் முதலில் விஞ்ஞான ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு மட்டுமின்றி இந்நாட்டின் நாகரிகத்தை உருவாக்கியவர்கள் பெருங்கற்கால மக்களே என்பதும் வரலாற்றுக் காலம் இம் மக்களின் நாகரிகத் தொடர்ச்சி என்பதும் வெளியாயிற்று. இவ்வாய்வில் திட்டவட்டமாக வட இந்தியாவிலிருந்து இங்கு சிங்கள மக்கள் குடியேறியதிற்கு எதுவித சான்றும் கிடைக்கவில்லை என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

பரணி நதிதீரத்திலமைந்த ஆதிச்ச நல்லூருக்கு நேர் எதிரில் அமைந்திருந்ததென்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்பொம்பரிப்புச் சான்றுகளை விரிவாக நாம் ஆராய்ந்தபோது இரு தாழிக் காடுகளுக்குமிடையே காணப்பட்ட தொல்லியற் சான்றுகளில் நெருங்கிய ஒற்றுமையைக் காண முடிந்தது. (Sitrampalam S. K. 1980) இத்தகையதொரு ஒற்றுமை விமலா பேக்லேயின் கருத்தையே மேலும் உறுதி செய்வதாக அமைந்துள்ளது.

இச்சந்தர்ப்பத்தில் பெருங்கற்கால பண்பாடு என்றால் என்ன? என்ற கேள்வி எழுகிறது. இப்பண்பாட்டை உருவாக்கியோர் ஒரு கால கட்டத்தில் இறந்தோரை அடக்கம் செய்வதற்கு பெரிய கற்களை உபயோகித்ததால் பெருங்கற்காலம் என்ற பெயரை இது பெற்றது.

எனினும், இவ்ஈமச்சின்னங்களை அமைக்கும்போது கற்கள் மட்டுமன்றி தாழிகள், குழிகள் ஆகியவற்றில் பெரிய கற்களை உபயோகிக்காமல் மேற்கொள்ளப்பட்ட அடக்கமுறைகளும் இப்பண்பாட்டில் அடங்கின. இதற்குக் காரணம் இவற்றுள் காணப்பட்ட பொருட்களிலுள்ள பிரதான ஒற்றுமையாகும்.

இவ்வம்சங்களில் இரும்பு ஆயுதங்கள் முக்கியம் பெற்றதால் தொல்லியலாளர் இக்காலத்தை இரும்புக் காலமெனவும் அழைப்பர். அத்துடன் கறுப்பு, சிவப்பு நிறமுடைய மட்பாண்டங்களும் இப்பண்பாட்டுக்குள்ள இன்னொரு சிறப்பு அம்சமாகும். இவற்றோடு நீர்ப்பாசனம், மந்தை வளர்ப்பு, நெல் விவசாயம் ஆகியவற்றிலும் இம்மக்கள் பயிற்சிபெற்றிருந்தனர். பொதுவாக இப்பண்பாட்டின் முக்கிய காரணிகளாக நான்கு அம்சங்கள் விளங்கின. அவையாவன மக்கள் இருப்பிடங்கள், அவர்கள் ஆக்கிய ஈமச்சின்னங்கள், படைத்த குளங்கள், தொழில்கள் மேற்கொண்ட வயல்கள் ஆகிய நான்கும் இப்பண்பாட்டின் பிரதான அம்சங்களாக விளங்கின. இன்று தென்னிந்தியாவில் திராவிட மக்கள் வாழ் பிரதேசங்களில் இவ்ஈமச் சின்னங்கள், படைத்த குளங்கள், தொழில்கள் மேற்கொண்ட வயல்கள் ஆகிய நான்கும் இப்பண்பாட்டின் பிரதான அம்சங்களாக விளங்கின, இன்று தென்னிந்தியாவில் திராவிட மக்கள் வாழ் பிரதேசங்களில் இவ் ஈமச்சின்னங்கள் பரந்து காணப்படுகின்றன. இவற்றை விரிவாக ஆராய்ந்த அறிஞர் இவை திராவிடருடையதே என்றும், கி. மு. 1000 ஆண்டளவில் இவர்கள் இத்தகைய ஈமச்சின்னங்களைப் படைக்கத் தொடங்கினாலும் கூட இப்பண்பாட்டு அம்சங்கள் கிறிஸ்துவிற்குப் பிற்பட்ட ஒரு சில நூற்றாண்டுகளுக்கும் தொடர்ந்து வளர்ச்சி பெற்றன எனவும் கருதுகின்றனர்.

கந்தரோடையில் கிடைத்த பெருங்கற்காலச் சான்றுகளும் அனுராதபுரத்தில் கிடைத்த பெருங்கற்காலச் சான்றுகளும் மக்கள்வாழ் இடங்களில் கிடைத்த சான்றுகளாகவே அமைந்துள்ளன. கந்தரோடையில் இப்பழைய ஆதிக் குடியேற்றம் நிகழ்வதற்கு வழுக்கை ஆறும் ஒரு பிரதான காரணியாக இருந்திருக்கலாம் என்பது குறிப்பிடத்தக்கது. ஆதிகாலத்தில் சிறு சிறு வள்ளங்கள் மூலமாக மக்கள் இப்பகுதியை அடைந்தனர் என்றும், கந்தரோடையில் கிடைத்த றோம நாணயங்கள், மட்பாண்டங்கள் போன்றவை அரிக்கமேடு போன்று இங்கும் ஆதிவர்த்தகம் சிறப்புப் பெற்றிருந்தது என்பதை எடுத்துக் காட்டுகின்றது. அத்துடன் இப்பகுதி மக்கள் பலவகை மீன்கள், மாடு, ஆடு போன்ற மிருகங்களை வளர்த்தும், உண்டும் மகிழ்ந்தனர் என்பதை மிருகங்களின் எலும்புகள் உறுதிசெய்கின்றன. இவ்வெலும்புகளில் குறிப்பாக பன்றி, மாடு ஆகியவற்றின் எலும்புகள். அக்கால மக்கள் இவற்றைத் தமது உணவுக்காகப் பயன்படுத்தினர் என்பதை விளக்குவனவாக அமைந்துள்ளன. இதனால் மாட்டைக் கொலைசெய்து உண்ணுதல் பாவம் என்ற உணர்வு நம்மவர் மத்தியில் பிற்காலத்தில்தான் வளர்ச்சி பெற்றதொரு மரபு என நாம் எண்ணத் தூண்டுகிறது. இங்கு கிடைத்த பொருட்களில் இரும்பு ஆயுதங்கள்: வெண்கலப் பொருட்களில் சூலம் ஒன்றும் குறிப்பிடத்தக்கது.

கந்தரோடையின் பழமையை, கடந்த ஆண்டு இப்பகுதிக்கு தொல்லியல் ஆய்வுக்காகச் சென்றபோது நாம் நேரே காண முடிந்தது. இப்பகுதியில் இன்றும் வெட்டப்படும் மல சலகூடக் கிடங்குகள், கிணறுகள் ஆகியவற்றுள் தொல்லியல் சான்றுகள் பலவற்றைக் காணக்கூடியதாகவுள்ளது. நாம் சென்றபோது ஒரு வெட்டப்பட்ட கிணற்றையும் அதன் உட்புறக் கரைகளில் காணப்பட்ட எலும்புகள்' சாம்பல்கள் ஆகியவை நிலத்துக்கடியில் ஆதிக் குடியேற்றம் பற்றிய அசையாத சான்றுகளை நகரம் அடக்கிவைத்திருப்பது தெரிந்தது. இக்கிணற்றில் வெட்டப்பட்ட மண் சுன்னுகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டதால் அங்கு சென்று எமது பல்கலைக்கழக மாணவர்களின் உதவியோடு அவற்றை அரித்துப் பார்த்தோம். அப்போது சதுர வடிவிலமைந்த ஒரு செம்பு நாணயம் கிடைத்தது.

இதன் ஒரு புறத்தில் யானை, மரம், தண்டில் அமைந்த சுவஸ்திகா, மலை அல்லது ஸ்தூபியும் காணப்பட்டது. மறு பக்கத்தில் மலையும் தண்டிலமைந்த சுவஸ்திகாவும் காணப்பட்டது, இத்தகைய சின்னங்களில் தண்டிலமைந்த சுவஸ்திகா போன்றவை இலங்கையில் காணப்படும் ஆதிப் பிராமிக் கல்வெட்டுக்களிலுண்டு.

அதேபோன்று மலை அல்லது ஸ்தூபி, யானை, மரம் ஆகியவை ஆதி நாணயங்களில் காணப்படுகின்றன. இதனுல் இவை அக்காலத்தில் வணக்கத்திற்குரிய பொருட்களாக விளங்கின என்ற கருத்து பொதுவாக ஏற்பட்டிருந்தாலும் இலங்கையிற் சிலர் யானை, மரம், சுவஸ்திகா, மலை ஆகியவை புத்தரது வாழ்க்கையில் நடைபெற்ற நான்கு முக்கிய சம்பவங்களை நினைவுபடுத்துகின்றன எனக் கூறி, இவை முறையே புத்தர் பிறப்பு, ஞான ஒளி பெறுதல், தர்ம போதனை, பரிநிர்வாண நிலை அடைதல் ஆகியனவற்றைக் குறிக்குமெனவும் வாதிட்டுள்ளனர். இதனுல் இவை கி. மு. 2ம் நூற்றுண்டு தொடக்கம் வழக்கிலிருந்ததால் புத்த மதக் கோட்பாடுகளை வெளிக்காட்டும் சின்னங்களே இவை என்பது இவர்கள் வாதம்.

எவ்வாருயினும் இத்தகைய நாணயங்கள் கந்தரோடையின் ஆதிக் குடியேற்றத்திற்கு மறைக்கமுடியாத சான்றுகளாகும். கந்தரோடையில்தான் சேர்போல் பீரிஸ் மீன் வடிவு பொறித்த பாண்டியர் நாணயங்களைப் பெற்றுர். இத்தகைய மீனையே குறியீடாக குறிக்கும் விதத்தில் எட்டுவடிவில் மேலிரண்டு கோடுகளும் விரிந்த அசோக பிராமி ''ம'' வடிவிலமைந்த மட்பாண்டத் திலமைந்த குறியீடு ஒன்றும் 1978-ம் ஆண்டில் இப்பகுதியில் ஆய்வு நடத்தியபோது நமக்குக் கிட்டியது. இத்தகைய குறியீடுகள் இலங்கையில் ஆதிப் பிராமிக் கல்வெட்டுக்களிலும் காணப்படுவது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

[ 1980-ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் வழுக்கையாற்றுக் கழிமுகத்துக் கிட்ட உள்ளதும் கடற்கரையோரமாக உள்ளதும் காக்கைதீவு வளை குடாவிற்கு நேரே எதிராக அமைந்ததுமான ஆனைக்கோட்டை மண்கும்பிகளில் ஒன்றில் பெருங்கற்கால பண்பாட்டைச் சேர்ந்த கலாச்சாரப் பொருட்கள் கிட்டின. இம் மண் கும்பியில் உள்ளமண் வெட்டி எடுக்கமுற்பட்டபோதே இத்தகைய சான்றுகள் வெளிவந்தன. இவற்றை இப்பகுதியில் மேலாய்வில் ஈடுபட்டிருந்த யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைக் குழுவினர் கண்டபோது இவற்றின் முக்கியம் புலப்பட்டது. இக்குழுவில் வரலாற்றுத்துறை துணை விரிவுரையாளர்களாகிய திரு. பொ. இரகுபதி, திரு. செ. கிருஷ்ணராசா ஆகியோரும் மாணவர்களான செல்வன் பொ. சிறீகாந்தா, மு. குணசிங்கம், பொ. புஸ்பரத்தினம், செல்வராசா, நடராசா ஆகியோரும் மாணவிகளான அஞ்சலாதேவி, இந்துமதி, ஈஸ்வரி, விஜயலட்சுமி. ஆகியோரும் வரலாற்றுத்துறை ஆராய்ச்சியாளரான செல்வி வசந்தமாலாவும் இடம் பெற்றனர். இதன் முக்கியத்துவத்தைக் கண்ட வரலாற்றுத் துறை பேராசிரியர் கா. இந்திரபாலாவும் நாமும் இவ்விடத்தைச் சென்று பார்த்தவுடன் இங்கு அகழ்வு நடத்தப்பட வேண்டும் எனத் தீர்மானித்து இவ்வகழ்வில் பேராசிரியர் கா. இந்திரபாலா அவர்கள் தலைமையில்

நாமும் திரு. பொ. இரகுபதியும் சேர்ந்து ஈடுபட்டிருந்தோம். இது நமது வரலாற்றுத் துறை மாணவர்களுக்கு நல்லதொரு பயிற்சிக் களமாகவும் அமைந்தது.

இங்கு வெளிக்கொணரப்பட்ட தொல்லியற் சின்னங்களில் பெருங்கற்கால பண்பாட்டின் சிறப்பம்சமாகிய கறுப்புசிவப்பு நிற மட்பாண்டங்களும் சிப்பிகள், சங்குகள், ரோம மட்பாண்டங்கள், இரும்பாயுதங்கள், லட்சுமி நாணயம் ஒன்றும் ஒரு வெண்கலத்திலமைந்த முத்திரை, இரண்டு மனித எலும்புக் கூடுகளும் குறிப்பிடத்தக்கது. இவ்வாய்வு பற்றி முழு அறிக்கையும் வெளிவராத நிலையில் முழுவிவரத்தையும் தர முடியாவிட்டாலும் ஏற்கெனவே பிரஸ்தாபிக்கப்பட்ட இம்முத்திரை, இவ்விடத்தில் காணப்பட்டுள்ள இரு மனித எலும்புக் கூடுகளின் முக்கியத்துவம் ஆகியனபற்றி நாம் கடந்த ஆண்டு (23-3-81-ல்) கொழும்பில் ஜெர்மனிய தூதரகம் ஒழுங்கு செய்த கருத்தரங்கில் கூறிய கருத்துக்களையே இங்கு தர விரும்புகிறேன்.

ஆனைக்கோட்டை அகழ்வின்போது இரண்டு மனித எலும்புக்கூடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. வடமாகாணத்தைப்பொறுத்தமட்டில் இங்கு கிடைத்த இரண்டாவது எலும்புக் கூடுகள் இவைதான். முதலாவது எலும்புக்கூடு திருக்கேதீஸ்வரத்தில் மறைந்த திரு. சண்முகநாதன் மேற்கொண்ட அகழ்வாராய்ச்சியின்போது கிடைத்தது. ஆனைக்கோட்டை எலும்புக்கூடுகள், மண்பிட்டியில் நான்கு அடி ஆழத்தில் காணப்பட்டுள்ளன. இப்பிட்டி எல்லாமாக நான்கு மண்படை அமைப்புக்களை கொண்டுள்ளது. முதற் படையில் அண்மித்த வயல்களைத் திருத்துவதற்காக அவற்றை அகழ்ந்தபோது தூக்கி மேலே போடப்பட்ட ஊரியும், இரண்டாவது படையில் செம்மஞ்சள் மண்வகையும், மூன்றாவது படையில் ஒருவித இருவாட்டிக் களிமண்ணும், நான்காவது படையில் கடற்கரையில் காணப்படும் இயற்கை ஊரியும் காணப்பட்டுள்ளது. இவ்வெலும்புக் கூடுகள் கடைசிப் படையில் தங்கி, இருவாட்டிப் படையிலே புதைக்கப்பட்டுள்ளன. இவற்றை வசதிக்காக A, B என இரு அடக்கங்களுக்கும் பெயர் சூட்டப்பட்டது. இவ்விரு அடக்கங்களும் சுமார் 10 அடி இடைவெளியில் தான் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வெலும்புக் கூடுகளின் நீளமும் சுமார் 5 அடியாகும். இவற்றின் A எலும்புக் கூட்டின் முழுப்பாகமும் பூரணமான நிலையில் கிடைக்கவில்லை. இடைமட்டுமுள்ள பகுதி பூரணமான நிலையிலும் ஏனையவை பாகங்களாகவும் கிடைத்துள்ளன. ஆனால் B எலும்புக்கூடோ எனில் பூரணமான நிலையில் மீட்கப்பட்டுள்ளது. இவற்றுள் A எலும்புக் கூட்டைப்பற்றி சற்று விரிவாக ஆராய்ந்தால் இதன் இடைவரை கைகள் நீளவிடப்பட்டு கைகட்டிய நிலையில் காணப்பட்டு இதன் தலை இடப்பக்கம் சரிந்தும் காணப்படுகிறது. B எலும்புக்கூட்டைப் போன்றே இதனின் தலைப்பக்கம் மேற்குத் திசையிலும் கால்ப்பக்கம் கிழக்குத் திசையையும் நோக்கி காணப்படுகிறது. A எலும்புக் கூட்டின் தலைமாட்டில் ஒரு மட்பாண்ட வட்டிலில் சுறு மாலையையும் ஒரு வெண்கல முத்திரையையும் கொண்ட கறுப்பு சிவப்புநிற வட்டில் காணப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் திருக்கேதீஸ்வரத்திலும் இத்தகைய்தொரு எலும்புக்கூடு 1950—1953-ம் ஆண்டுக் காலப் பகுதியில் திரு. சண்முகநாதனுல் அகழ்ந்தெடுக்கப்பட்டது. (Shanmuganathan S. 1960) அளவிலும் அது அமைந்திருந்த திசையை பொறுத்த மட்டிலும் ஏன் ஆனைக்கோட்டை A எலும்புக்கூட்டைப்போல் கைகட்டியநிலையிலும் ஒத்துக்காணப்பட்டுப் பூரணமான நிலையில் காணப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இவ்வெலும்புக்கூடு அமைந்த மண்படைக்குச் சற்று மேலுள்ள படையில் கிறீஸ்தவ சகாப்தத்தை அண்டிய ரோம மட்பாண்டங்களும் காணப்பட்டுள்ளது. இத்தகைய நிலையே ஆனைக்கோட்டையிலும், திருக்கேதீஸ்வர எலும்புக்கூட்டைச்சுற்றி ஒருசில மட்பாண்டங்கள் காணப்படுகின்றன. ஆனைக்கோட்டையிலும் சிப்பிப்படையில் மேலே தாக்கப்பட்ட இவ்வெலும்புக்கூடுகளைச்சுற்றி சங்குகளும் உடைந்தநிலையில் கறுப்புச்சிவப்பு நிற மட்பாண்டங்கள், சிவப்புநிற மட்பாண்டங்கள் ஆகியனவும் காணப்பட்டுள்ளன.

இவற்றில் காணப்படும் மிருக எலும்புகள் குறிப்பாக ஆடு, மாடு, பன்றி போன்றவை. இவை உணவுப்பொருட்களாக இக்காலமக்களால் பயன்படுத்தப்பட்டதுடன் இடுகாட்டில்கூட இக்கால மக்களால் இறந்தோருக்குப் படைக்கும் முறைகளுக்குப் பயன்படுத்தப்பட்டதையும் வெளிக்காட்டுகின்றன.

இவ்வாறு இறந்தோரைக் குழிகளில் புதைக்கும் வழக்கத்தைச் சிந்துவெளி நாகரிக காலம்தொட்டுக் கண்டாலும் தென்னிந்தியாவில் புதிய கற்காலத்திலும் அதன்பின் வந்தபெருங்கற்காலத்திலும்இவ்வழக்கம் மக்களின் அடக்கு முறைகளில் கடைப்பிடிக்கப்பட்டதை புறநானூற்றில் வரும்;

'இடுகவென்றோ, சுடுகவென்றோ
படுகுழிப்படுக்க' என்ற குறிப்பும்,

மணிமேகலையில்:

'இடுவோர் சுடுவோர்
தொடுகுழிப் படுப்போர்'

போன்ற சான்றுகளும் உறுதிப்படுத்துகின்றன. இத்தகைய வழக்கம் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களால் பேணப்பட்டதோடு வரலாற்றுக் காலத்திலும் இக்கலாசார நீடித்தபோது இதுவும் நிலைத்திருந்தது என்பதை ஆனைக்கோட்டை, மாந்தை போன்ற இடங்களில் கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புக் கூடுகள் உறுதிப்படுத்துகின்றன. திருக்கேதீஸ்வரத்தில் கிடைத்த மனித எலும்புக் கூட்டை ஆராய்ந்த அறிஞர் இது தென்னிந்திய வர்க்கத்தைச் சேர்ந்தது எனக் கருத்துத் தெரிவித்துள்ளனர். (Chanmugam and Jayawardane *1956*) பொம்பரிப்பில் கிடைத்த மனித எலும்புக் கூடுகளும் தென்னிந்திய பெருங்கற்காலப் பண்பாட்டை உருவாக்கிய திராவிடருடையதே என்ற கருத்தை கென்னடி அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். (*Kennedy - K. A. R. 1975*) கந்தரோடை மட்பாண்ட கலாசாரச் சான்றுகளும் இதையே உறுதிசெய்கின்றன.

இப்பின்னணியில் நோக்கும்போது ஆனைக்கோட்டை மனித எலும்புக்கூடுகளும் தென்னிந்திய கலாசாரத்தை இங்கு புகுத்திய திராவிடருடையதே என்று கொள்வதுதான் பொருந்தும். இவற்றை விரிவாக மானிட இயல் ஆய்வுதான் எடுத்துக் காட்டும். இருந்தும் இத்தகையதொரு முடிவை எலும்புக் கூட்டுடன் கண்டெடுக்கப்பட்ட வெண்கல முத்திரை ஒன்றும் எடுத்துக் காட்டுகின்றது.

இதை வாசித்த பேராசிரியர் கா. இந்திரபாலா இதுவொரு இருமொழிச் சாசனம் என்றும், முதல் வரியில் சிந்துவெளியை ஒத்த சித்திர எழுத்துக்கள் காணப்படுகின்றன என்றும் இத்தகைய சித்திர எழுத்துக்கள் பெருங்கற்கால மட்பாண்டங்களிலும் உண்டெனவும் எடுத்துக்காட்டி இதன் கீழ்வரும் பிராமி எழுத்துக்களின் உதவிகொண்டு இச் சித்திர எழுத்துக்களை வாசிக்க முற்பட்டு இம்முத்திரைக்கு கோவேதன், கோவேந்தன் என்ற விளக்கங்களைக் கொடுத்துள்ளார். (*Indirapala K. 1981*)

எமது ஆய்வுக்குழுவில் இன்னொரு அங்கத்தவராக திரு. பொ. இரகுபதி இம்முத்திரை வாசகத்தைப் பின்வருமாறு வாசித்துள்ளார். அவையாவன கோவேதம், கோவேத (இரகுபதி பொ. வீரகேசரி *14.6.1981*). இவ்விளக்கத்தில் முக்கியமாக நாம் கவனிக்கவேண்டிய அம்சம் யாதெனில் முதல் வரியில் வரும் சித்திர எழுத்துக்கள் மூன்றாக உள. முதலிரண்டும் திரிசூலவடிவிலும் கடைசி எழுத்து பிராமி 'ம' வடிவிலும் உள்ளதேயாகும். சூலவடிவிலமைந்த முதலிரண்டு எழுத்துக்களும் 'கோ' எனவும் 'வே' எனவும் உச்சரிக்கப்பட்டமை ஈண்டு நோக்கற்பாலது. சந்தர்ப்பத்திற்கு ஏற்ற முறையில் இவ்விதம் இவற்றை உச்சரிக்கலாம் எனத் தற்காலிய ஜப்பானிய சீன மொழிகளின் உதாரணங்களைக் கொண்டு கூறினாலும்கூட 'கோ'வையும் 'வே'யையும் குறித்து நிற்கும் இந்த திரிசூலம் மட்பாண்டங்களிலும், இலங்கையின் ஆதிப்பிராமிக் கல்வெட்டுக்களிலும், நாணயங்களிலும், மந்தைகளின் பட்டிக்குறியாகவும் காணப்படுவதை நோக்கும்போது இத்தகையதொரு வாசிப்பு உண்மையில் பொருந்துமா என்ற கேள்விதான் எழுகின்றது. மட்பாண்ட ஓடுகளில் கூட மற்றைய தெளிவற்ற குறியீடுகளுடன் சில இடங்களில் முதலிலும் சில இடங்களில் இடையிலும் சில இடங்களில் கடைசியிலும் காணப்படுவது இதன் உச்

சரிப்புப் பற்றி மேலும் ஐயத்தை எழுப்புகிறது. சிந்துவெளி நாகரீக எழுத்தை இற்றைவரை பலர் வாசிக்க முயன்றும் வெற்றிபெறவில்லை. இவ்விதம் வாசித்தோர் கூட திரிசூலமாக வரும் குறியீட்டுக்கு வேறு பல உச்சரிப்புகளைக் கொடுத்துள்ளனர். எனவே இம்முத்திரை ஒரு முக்கிய தொல்லியல் சான்றாக அமைந்தாலும்கூட இதில் காணப்படும் எழுத்துக்களின் எண்ணிக்கை மிகமிக குறைவாக இருப்பதாலும் இவை பற்றி ஐயந்திரிபுற வாசிக்கமுடியாத நிலையில் இருப்பதாலும் எகிப்திய நாகரீகத்தின் எழுத்தை வாசிக்க றொசெற்றாக் கல்வெட்டு உதவியதுபோன்று இதுவும் சிந்துவெளி பற்றிய புதிரைத் துலக்கவைக்க உதவும் என்பது பற்றித் திட்டவட்டமாக எதுவும் கூற முடியாத நிலையில் இருக்கிறோம். எவ்வாறாயினும் சீழ்வரியில் வரும் பிராமி வரிவடிவம் பற்றிய பேராசிரியர் கா. இந்திரபாலாவின் வாசிப்பு ஏற்றுக்கொள்ளத்தக்கதே. இவ்வாறான பின்னணி திராவிட மக்கள் அதுவும் கி. மு. 3-2ம் நூற்றாண்டுகளில் பிராமி மொழியை அறிந்திருந்தனர் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இதனால் வட பகுதியில் இலங்கையின் ஏனைய பகுதிகளில் காணப்படுவதுபோன்று பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படாவிட்டாலும் இங்கு சிங்களமக்கள் வாழவில்லை என்பது பொருளல்ல என விசனிக்கும் பரணவித்தானா போன்றோருக்கு (Paranavitana - 1970) இத்தகைய சான்று வடபகுதி மக்கள் திராவிட மொழி பேசிய மக்கள், பிராமி மொழியையும் அறிந்திருந்தனர் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இதையே கந்தரோடை மட்பாண்டங்களில் இதே காலத்தில் வரும் பிராமிவரி வடிவங்களும் வல்லிபுரப் பொன் சாசனத்தில் வரும் கி. பி. 2-ம் நூற்றாண்டைச் சேர்ந்த பிராமி வரிவடிவங்களும் எடுத்துக்காட்டுகின்றன. ஆனைக்கோட்டை அகழ்வின்போது கிடைத்த சான்றுகள் குறிப்பாக சட்டிகளில் காணப்பட்ட மிருக எலும்புகள், சங்குகள் போன்றவை சங்க இலக்கியங்களில் இறந்தோருக்கு இடப்படும் பலிப்பொருட்களை நமது கண்முன்னே நிறுத்துகின்றன. புறநானூற்றில்,

நோகோ யானே தேய்கமாகாலை
பிடியடியன்ன சிறுவழி மெழுகித்
தன்னமர் காதலி புன்மேல் வைத்த
இன்சிறு பிண்டம் யாங்குண்டனன்
கொல்

உலகு புகத்திறந்த வாயிற்
பல ரோடுண்டன் மரீஇயோனே.

(புறம்–234)

எனவரும் குறிப்பில் இறந்தோருக்கு சோற்றுத்திரள் பலிப்பொருளாக படைத்தலும் அகநானூற்றில்,

நடுகள் பீலி சூட்டித் துடிப்படுத்துத்
தோம்பிக் கள்ளொடு துரூஉப்பலி
கொடுக்கும்

(அகம் 35–8–9)

எனவரும் செய்யுளில் ஆடுபோன்றவை பலி இட்டதையும் உணர்த்துகின்றது. மனித எலும்புக் கூடுகளுடன் காணப்படும் சுறா எலும்புகள் அக்காலத்தில் இவர்கள் வாழ்க்கையில் மீன்பிடித்தல் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றதால் சுறாவை ஒரு வணக்கத்திற்குரிய பொருளாகக் கொண்டு அதன் எலும்புகளை இம்மக்கள் அணிந்திருந்ததையும் எடுத்துக் காட்டுகின்றது. இத்தகைய தொரு வழக்கம் சங்கத்தமிழ் மக்கள் குழுவினராகிய ' பரதவர்'' இடையே காணப்பட்டது. இதையே பட்டினப்பாலையில் வரும்,

சினைச் சுறவின் கோடு நட்டு
மனைச் சேர்த்திய வல்லணங்கினால்
மடற்றாழை மலர் மலைந்தும்
பிணர் பெண்ணைப் பிழிமாந்தியும்
புன்றலையிரும் பரதவர்
பைந்தழை மா மகளிரோடு
பாயிரும் பனிக்கடல் வேட்டஞ்
சொல்லாது
உவவு மடிந்துண்டாடியும்.

(பட்டினப்பாலை-86-93)

என்றகுறிப்பில் பெரும்பாணாற்றுப் படையில் சுறவுவாய் அமைந்த சுரும்புகழ் சுடர்நுதல்
(பெரும்பாணாற்றுப்படை 385)

என்ற குறிப்பும் எடுத்துக் காட்டுகின்றது.

சுடு வணக்கம், சுடு எலும்புகளை மாலையாகக் கோர்த்துச் சூடுதல் சங்க காலத்தில் பாண்டி நாட்டின் தென்கோடியில் வாழ்ந்த பரதவர் மத்தியில் காணப்பட்ட வழக்கமாகும். தமிழ் நாட்டிலும் தென்கோடியில் வாழ்ந்த பெருங்கற்கால மக்கள் அமைத்த ஈமச்சின்னங்களில் குழியில் அடக்கம் செய்தல் பெருவழக்கமாக இருந்ததும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

இவர்களுக்கு நேரே இருந்த வடமாகாணக் கரையிலும் கற்கள் பரவலாகக் காணப்படாத காரணத்தால் இவ்வழக்கம் காணப்பட்டதெனக் கொள்ளலாம். அத்துடன் பரதவர்பற்றிய குறிப்பு சங்க இலக்கியங்களில் வருவதுபோன்று ஈழத்தின் ஆதி பிராமிக் கல்வெட்டுக்களிலும் காணப்படுவதால் (*Sitrampalam S. K. 1980*) ஆனைக் கோட்டை, மாந்தைக் கரையோரரங்களிலும் இவர்கள் வாழ்ந்திருக்கலாம் எனக் கொள்ளக் கிடக்கின்றது.

இப்பகுதிகளில் குறிப்பாக காக்கைதீவு வலைகுடா, மாந்தை போன்றவை துறைமுகங்களாக விளங்கின எனவும் கொள்ளலாம். இக்கருத்தையே இங்கு கண்டெடுக்கப்பட்ட ரோம மட்பாண்டங்கள் எடுத்துக் காட்டுகின்றன. மாந்தைபற்றி சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. இவற்றில் இது 'குட்டுவன் மாந்தை' என விளிக்கப்படுகிறது. ஏன் மகா தீர்த்தம் எனவரும் பாளிப் பெயர் மாந்தையையே குறித்தது. மகாதீர்த்தம் உண்மையில் பெருந்துறையின் பாளி மொழி பெயர்ப்பு எனக்கொள்ளலாம்.

பாண்டி நாட்டிலும் திருப்பெருந்துறை என அழைக்கப்பட்ட துறைமுகம் இருந்தது வரலாறு. ஈழத்திலும் ஆதியில் பாண்டி நாட்டிலிருந்து குடிபெயர்ந்தோர் இங்குள்ள துறைமுகத்துக்குப் பெருந்துறை என்ற பெயரை வழங்க அது பாளி நூலோரால் பாளி நூல்களில் மகாதீர்த்த என அழைக்கப்பட்டதெனக் கொள்வதே தர்க்கரீதியான கருத்தாகும்.

ஏனெனில், அண்மையில் இங்கு கண்டெடுக்கப்பட்ட பெருங்கற்கால கலாசாரத்தின் சிறப்பம்சமாகிய கறுப்பு, சிவப்பு நிற மட்பாண்டங்களும்; கடந்த நூற்றாண்டில் இதில் அகழ்வுசெய்த போக் என்ற அறிஞரும் ஆதியில் இப்பகுதி தென்னிந்திய மக்கள் குடியேறிய பகுதி எனக் கூறியதும் இங்கே குறிப்பிடத்தக்கது. (*Boake 1887*; மாந்தைபற்றி ஆராய்ந்த செனரத்தின *Senaratne s. p. f. 1965*) இதுவும் தமிழ்நாட்டில் உள்ள அரிக்கமேடு போன்று ஒரு பெயர் பெற்ற துறைமுகம் என்பதை எடுத்துக் கூறத் தவறவில்லை. இதன் சிறப்பை பின் வந்த விமலா பேக்லேயும் விளக்கியுள்ளார்.

வெளிநாட்டு வர்த்தகத்தில் தமிழ்நாட்டில் புகார், அரிக்கமேடு போன்று ஈழத்திலும் மாந்தை போன்ற துறைமுகங்கள் சிறந்து விளங்கியதை இங்கு காணப்படும் ரோம, சீன மட்பாண்டங்களே எடுத்துரைக்கின்றன.

இச்சந்தர்ப்பத்தில் அகநானூற்றில் மாமூலனார் இத்துறைபற்றிக் கூறுவது மேலும் இதன் சிறப்புக்கு அசையாத சான்றாகும்.

'நன்னகர் மாந்தை
முற்றத்தொன்னார்
பணிதிரை கொணர்ந்த
பாடுசேர் நன்கலம்
பொன் செய்பாவை
வயிர மொடாம்பு
லொண்ணுவால் நிறையக்
குவை இயன்றவ
ணிலத்தினத் துறந்த
நிதியத்தனன்"

(அகம் 127)

மாந்தை நகரின் அழிபாடுகளான வீதிகளைச் சண்முகநாதன் தன் ஆய்வில் எடுத்துக் கூறியுள்ளார். இன்றும் விமானத் படத்தில் அகழிகளுடன் கூடிய இத்திரு நகரின் படம் தெட்டத் தெளிவாக இதன் தொன்மையைப் பறைசாற்றுகின்றது.

தமிழகத்திற்கும் இதற்குமுள்ள தொடர்பை இன்று இங்கு இதனருகில் ஓடிக்கொண்டிருக்கும் நதியாகிய மல்வத்து ஓயா எமக்கு எடுத்துக்காட்டுகின்றது. மகாவம்சம்போன்ற பழைய பாளி நூல்களில் இது கடம்பநதி என அழைக்கப்படுகின்றது. தமிழக சமூகப் பிரிவில் கடம்பர் பெற்ற இடத்தை புறநானூறு.-

'துடியன் பாணன் பறையன்
கடம்பனென்றின் நான்கல்லது
குடியுமில்லை'

(புறம் 335)

எனக் கூறுவதை நோக்கும்போது கடம்பரால்தான் இப்பெயர் இந்நதிக்கு இடப்பட்டதோ அன்றி தமிழர் போற்றிய முருகனின் கடம்ப மரம் இப்பகுதியில் செறிந்து காணப்பட்டதால் இப்பெயர் இதற்குக் கிட்டியதோ என ஐயுறவேண்டியுள்ளது. எவ்வாறுயினும் பண்டைய தமிழகம் இப்பகுதியுடன் நெருங்கி உறவாடியது தெளிவாகிறது. சங்க இலக்கியங்கள் பேசும் குட்டுவன் மாந்தைகூட ஒரு சமயம் சேரர் இப்பகுதியில் கொண்ட மேலாதிக்கத்தைக் குறிக்கலாம்.

ஆனைக்கோட்டையில் கண்டெடுக்கப்பட்ட சிப்பிகள், சங்குகள் போன்றவை இப்பகுதி மக்கள் கடலோடு நெருங்கிய தொடர்பு வைத்திருப்பதையும், மட்டி போன்ற உணவு வகைளை இவர்கள் உண்டதையும், சங்குத் தொழிலில் இவர்கள் ஈடுபட்டதையும் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. பாண்டி நாட்டிலும் பரதவர் குலத்தவர் இத்தொழிலில் ஈடுபட்டதைச் சங்க இலக்கியங்கள் விபரிக்கும்.

ஆனைக்கோட்டையில் கிடைத்த இரும்பு ஆயுதங்களில் ஈட்டிகள், கத்திகள், வேலை ஒத்த கருவிகள் குறிப்பிடத்தக்கவை. வேலை ஒத்த ஒருதலைச் சூலம் பொம்பரிப்பிலும் காணப்பட்டது ஈண்டு குறிப்பிடத்தக்கது. இஃது இந்நாட்டில் வேல் வணக்கத்தின் தொன்மைக்கு அசையாத சான்று. பாண்டி நாட்டில் ஆதிக்க நல்லூரிலும் இத்தகைய வேல்கள் காணப்பட்டன.

இலங்கையில் வரலாற்றுக் கால தொல்லியல் படைகளில் காணப்படுவது போன்ற 'லட்சுமி' நாணயத் தகடு ஒன்றும் ஆனைக்கோட்டையில் கிடைத்துள்ளது. இதன் ஒரு பக்கத்தில் இலட்சுமியின் உருவமும் மறுபக்கத்தில் தண்டின் மேலுள்ள சுவஸ்திகாவும் காணப்படுகின்றது.

இத்தகைய தகடுகள் கந்தரோடை, முல்லைத்தீவு, அனுராதபுரம் போன்ற இடங்களில் காணப்பட்டுள்ளன. தண்டுடன்கூடிய சுவஸ்திகா பொதுவாக இலங்கையின் ஆதி நாணயங்களில் குறிப்பாக செப்பு நாணயங்களின் பின்பக்கத்தில் காணப்படும் ஒரு குறியீடு மாத்திரமல்லாமல் ஆதிப் பிராமிக் கல்வெட்டுக்களிலும் இத்தகைய குறியீடு காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

மட்பாண்டங்களைப் பொறுத்தமட்டில் இங்கே காணப்பட்டுள்ளவற்றில் பெருமளவிற்குக் கறுப்புச், சிவப்புநிற மட்பாண்டங்களே காணப்படுகின்றன. இத்தகைய மட்பாண்டங்களே தென்னாட்டுப் பெருங்கற்கால மட்பாண்டங்களிலும் காணப்படுகின்றது. பெரும்பாலும் எல்லா மட்பாண்டங்களும் உடைந்த நிலையிலேதான் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை தோற்றத்தில் கிண்ணங்கள், வட்டில்கள், பானைகளாகவுமுள. கிண்ணங்களும் வட்டில்களும் பலவித வடிவிலும் தடிப்பிலும் காணப்பட்டாலும் இவற்றின் தோற்ற அமைப்பு இவற்றுக்கும் கந்தரோடை, அனுராதபுரம், பொம்பரிப்பு, திஸமகாராம போன்ற இடங்களிலுள்ள மட்பாண்டங்களுக்குமிடையே இளைவிட்டோடும் ஒற்றுமையை எடுத்துக் காட்டுகின்றது. இருந்தும் பானைகளில் சிவப்புநிற மட்பாண்டங்களும் காணப்படுகின்றன. இவற்றில் சில உள்ளே கறுப்பும் சில முழுக்க முழுக்க சிவப்பு நிறத்தாலும் ஆனவையாகும். வெளிப்பகுதிகளில் பலவித வண்ணக் கோடுகளினால் அலங்கரிக்கப்பட்டும் இவை காணப்படுகின்றன.

ரோம மட்டங்களில் குறிப்பிடத்தக்கவை லவுலட் கோடுடை மட்பாண்டங்களாகும். பொதுவாக மட்பாண்டங்களில் குறியீடு

களின் எண்ணிக்கை குறைவாகவே காணப்பட்டாலும் சிலவற்றில் வழக்கமாகக்காணப்படும் இரு கரமும் விரிந்த பிராமி 'ம' வடிவில் காணப்படும் குறியீடு குறிப்பிடத்தக்கது. இது உண்மையில் மீனை உருவகப்படுத்தப்படும் குறியீடேயாகும். இத்தகைய குறியீடு கந்தரோடை, அனுராதபுரம் ஆகிய பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட மட்பாண்டங்களிலும் ஆதிப் பிராமிக் கல்வெட்டுக்களிலும் காணப்படுகிறது.

இவ்வாறு நோக்கும்போது ஆனைக்கோட்டை ஈழத்தின் வரலாற்றுக்காலம் இடுகாடுகளில் ஒன்றாகவே காணப்படுகிறது. சங்க இலக்கியங்கள் இத்தகைய அடக்குமுறைகளைத் தொடுகுழிப்படுப்போர் எனப் பேசுகின்றன.

பெருங்கற்காலப் பண்பாடு விவசாயத்தை மையமாக வைத்து வளர்ந்தாலும் இம்மக்கள் விவசாயத்தோடு தம் பிரதான தொழிலாகக் கடற்றொழிலையும், வாணிபத்தையும் மேற்கொண்டனர் என அறியமுடிகிறது.

இம்மக்கள் வாழ்ந்த இல்வாழ்விடம் பற்றி தற்போதைய நிலையில் அறியமுடியாமலிருக்கிறது. ஆனைக்கோட்டை மண்மேடுகளிலன்றி அண்டியுள்ள குடியிருப்புக்களிலோ இதற்கான சான்றுகள் இற்றைவரை கிட்டவில்லை. ஒரு சில இடங்களில் மட்பாண்டங்கள் காணப்படுகின்றன. இவை கிறிஸ்து சகாப்தத்திற்குச் சில நூற்றுண்டுகளுக்குப் பிந்தியதாகவேயுள.

கடந்த ஆண்டு நாமும் புவியியல்துறை விரிவுரையாளரான நண்பர் அ. கணபதிப்பிள்ளையும் வழுக்கையாற்றுக் கழிமுகத்திலிருந்து மேலாய்வு மேற்கொண்டபோது வழுக்கையாற்றுக்குச் சிறிய தூரத்திலுள்ள மேட்டில் தற்போது களையோடை அம்மன் கோயில் இருக்கும் இடத்திற்கருகாமையில் மட்பாண்ட ஒடுகள். இரும்பு. கழிவுப் பொருட்கள் ஆகியவற்றைக் கண்டெடுத்தோம். இருந்தும் இம்மட்பாண்டங்களும் ஆனைக்கோட்டையில் கிடைத்த மட்பாண்டங்களைப் போன்று காணப்படாது கிறிஸ்தவ சகாப்தத்தை அண்டியுள்ள மட்பாண்டங்களாகவே காணப்படுகிறது.

கரையோரமாக மேற்கொண்ட ஆய்வில் புன்னாலை கிருஷ்ணன் கோவிலின் மேற்குப் பகுதியில் சில கறுப்பு சிவப்புநிற மட்பாண்டங்கள் கிடைத்தன. இவற்றில் கிண்ணங்களின் பாகங்களும் வட்டில்களின் பாகங்களும் அடங்கும். இருந்தும் தற்போதய நிலையில் பெருமளவு இவை காணப்படாத நிலையில் ஆதிக்குடியிருப்புக்கள் இங்கிருந்தன என நிச்சயமாகக் கொள்ள முடியாவிட்டாலும்கூட கடந்த ஆண்டு நாமும் வரலாற்றுத்துறை துணை விரிவுரையாளர் திரு, பொ. இரகுபதியும் இக்கரைக்கு அப்பால் உள்ள களபூமியில் கண்டெடுத்த கறுப் சிவப்புநிற மட்பாண்டங்களை நினைவுகூரும்போது இப்பிராந்தியம் பெரும் கற்கால மக்கள் நடமாட்டத்திற்கு உட்பட்டதொன்றாகவே இருந்திருக்கவேண்டும் எனக்கொள்ளலாம். கந்தரோடையில் கிடைத்த கறுப்பு சிவப்பு மட்பாண்டங்களில் உள்ள மினுமினுப்புத் தன்மை புன்னாலை மட்பாண்டங்களில் காணப்படுவது. இவை நிச்சயமாக கிறிஸ்தவ சகாப்தத்தின் சில நூற்றாண்டுகளுக்கு முன்னதாக வழக்கில் இருந்தன எனக்காட்டுகின்றது. சங்க இலக்கியம் குறிக்கும் மாயவன் வழிபாடுதான் பின்வந்த கிருஷ்ணன் வழிபாட்டோடு சங்கமித்தது வரலாறு. தற்போதய திருவடி நிலைக்கு அருகிலுள்ள மழுவையிலும் ஆதிக்குடியேற்றத்திற்கான எச்சங்கள் தென்படுகின்றன. இவற்றில் கூரையோடுகள், பௌத்த கட்டிடங்களை அமைக்க பயன்படுத்தப்பட்ட துணையுடைய தூணின் அடித்தளங்கள் சிவப்பு மட்பாண்டங்கள், கறுப்பு சிவப்புநிற மட்பாண்டங்கள், கழிவு இரும்புப் பொருட்கள் குறிப்பிடத்தக்கவை. இருந்தும் இங்கு காணப்படும் கறுப்புநிற மட்பாண்டங்கள் புன்னாலை அல்லது களபூமி மட்பாண்டங்கள்போன்று பழமையானவையாகக் காணப்படவில்லை. ஜாதகக் கதைகளில் குறிப்பாக அகிதஜாதகவில் காரைதீவு குறிப்பிடப்படுவதால் இப்பிராந்தியம் கடல்வாணிபத்தில் அக்காலத்தில் சிறப்புப்பெற்றிருந்தது எனலாம். ஏன்

மழுவை அமைந்த பகுதியும் ஒரு வளைகுடா வாகவே தற்பொழுது காட்சிதருகிறது. வேலணையிலுள்ள சாட்டிபோன்று கப்பல் கள் தரித்து நிற்பதற்கு ஏற்றதாகவும் அமைந்துள்ளதால் பாளி நூல்களில் குறிப் பிடப்படும் ஜம்புகோளபட்டினம் இப்பகுதி யில் அமைந்திருக்கலாம் என எண்ண இட மிருக்கிறது. வட இந்தியாவோடு இலங்கை கொண்டிருந்த கலாச்சார தொடர்பில் இத்துறைமுகம் முக்கியமாகக் குறிப்பிடப் படுகிறது. இதற்கப்பாலுள்ள மாதகல்துறை காங்கேசன்துறைப் பகுதி ஆகியவற்றோடு ஒப்பிட்டு நோக்கும்போது மழுவைப் பகுதியே கிறிஸ்தவ சகாப்தத்தில் முக்கியம் பெற்ற இடமாக விளங்கியது தெரிகிறது. எவ்வாருயினும் விரிவான அகழ்வாய்வு தான் இத்தகைய கருத்தை மேலும் உறுதி செய்யும்.

தீவுப்பகுதிகளில் ஆனைக்கோட்டைக்கு நேரெதிரிலுள்ள வேலணை குறிப்பிடத்தக் கது. வேலணையிலுள்ள கும்புறுப்பிட்டி மண் கும்பானிலுள்ள சாட்டி காரந்தனையிலுள்ள தும்பாசிமால், மஞ்சள்கேணி ஆகிய இடங் களில் கூரைஓடுகள், கறுப்புசிவப்புநிற மட் பாண்டங்கள், கழிவு இரும்பு ஆகியவை சிறப்பாகக் காணப்பட்டாலும் இம்மேலாய் வில் கிடைத்த தகவல்களை மட்டும் மைய மாக வைத்து ஆராயும்போது இவற்றை கிறிஸ்தவ சகாப்தத்தை அண்டியுள்ள கால மாகவே கொள்ள இடமுண்டு. இச்சந்தர்ப் பத்தில் அல்லைப்பிட்டியில் கி. பி. 8, 9–ம் நூற்றுண்டைச் சேர்ந்த சீனமட்பாண்டங் கள் காணப்பட்டதும் இப்பிராந்தியம் ஆதி வர்த்தகத்தில் பெற்ற முக்கியத்துவம் தெளி வாகிறது. கும்புறுப்பிட்டியிலுள்ள சிலபகுதி யில் பௌத்த தாதுகோபுரத்தின் அழிபாட் டிற்கான சான்றுகள் காணப்படுகின்றன. இத்தகைய சான்றுகள் காரைநகரிலுள்ள வேரப்பிட்டியிலுள்ள இதைஒத்த சான்று களை ஒத்துக்காணப்படுவதும் ஈண்டு குறிப் பிடத்தக்கது. புங்குடுதீவு, நயினதீவுச் சான்றுகளும் கிறிஸ்தவ சகாப்தத்திற்குச் சில நூற்றுண்டுகளாவது பிந்தியவையே. அறிஞர் மகாவம்சத்தில் குறிப்பிடப்படும் 'புயங்குதீவ' என்பதுதான் புங்குடுதீவு என கொண்டு மகாவம்சம் குறிக்கும் சம்பவம் கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முற்பட்ட கால மாக இருக்கிறது எனக் கொண்டாலும்கூட இதை உறுதிப்படுத்தும் தொல்லியற் சான் றுகள் இங்கு காணப்படாதது குறிப்பிடத் தக்கது. நயினதீவும் இவ்வாறே. நெடுந்தீ வில் உள்ள வெடியரசன் கோட்டை என நம்பப்படுமிடத்தில் காணப்படும் பௌத்த தாதுகோபுரங்களின் அழிபாடுகள் கந்த ரோடை தாதுகோபுரங்களை நினைவூட்டி, காலத்தாலும் இவற்றை பிற்பட்ட அநுரா தபுரகாலம் அல்லது அதற்குச் சற்று பிந் தியகாலமாகவே கொள்ள முடிகிறது.

அடுத்தாற்போல் பூநகரிப் பகுதியில் மேற்குக் கரையோரத்தில் கல்முனைவரை யுள்ள பகுதிகளில் மேலாய்வு மேற்கொண் டோம். இச்சந்தர்ப்பத்தில் கிரேக்க அறி ஞர்கள் கல்முனைபற்றிக் குறிப்பிடுவதும் இங்கு லட்சுமி தகடுகள் எடுக்கப்பட்டது பற்றி இராசநாயகம் முதலியார் தமது நூலில் எடுத்துக் காட்டுவதும் நினைவுகூரற் பாலது.

கிறிஸ்துவை அடுத்த சகாப்தங்களில் வணிகக் கப்பல்கள் இக்கல்முனையைத் தொட்டு யாழ்குடாநாட்டையும் கிளி நொச்சிப் பகுதிக்கும் இடைப்பட்ட கடல் வழியாக சுண்டிக்குளம் மூலமாக கிழக்குத் திசையை அடைந்ததை முதலியார் இராச நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

இதனல் சுண்டிக்குள பகுதி பிற்காலத் தில்தான் கிளிநொச்சிப் பகுதியுடன் இணைந்ததென்பர் அறிஞர். பூநகரிப்பகுதி யில் மண்ணித்தலை, வினசி ஒடை, வெட் டுக்காடு போன்ற இடங்கள் நம்மால் ஆரா யப்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் மண்ணித் தலையில் பெருங்கற்கால பண்பாட்டைச் சேர்ந்த ஈமக்கிண்ணங்களில் ஒன்ருன கல் வட்டமும், இலட்சுமி தகடுகள், மணிகள் போத்துக்கேயர் உபயோகித்த சுங்கான் ஆகியவையும் காணப்பட்டுள்ளதாக திரு. பொ. இரகுபதி அறிவித்துள்ளார். (*Daily News 6-10-81*) இருந்தும் இக்கல்வட்டம் உண்மையில் பெருங்கற்கால ஈமச்சின்னங்

களிலொன்முன கல்வட்டம் என்பது கேள் விக்குறியாகவே இருக்கிறது.

மண்வளம் நிரம்பியுள்ள இப்பகுதிகளில் குழிகளில் அடக்கம்செய்து ஈமச்சின்னமாக கல்வட்டத்தை அடுக்கிவிடுதல் நடந்திருக் கலாம் எனக்கொண்டாலும்கூட சரியான ஆய்வின்றி ஒருவட்டத்தை மட்டும் எடுத் துக்கொண்டு இதை உறுதிப்படுத்தும் வேறு சான்றுகளின்றி இவற்றை கல்வட்டம்என விரித்துக்கூறல் பிழையான முடிபுஎன்பதை இப்பகுதியில் நாம்மேற்கொண்ட மேலாய்வு எடுத்துக்காட்டியுள்ளது. வெட்டுக்காட்டில் நமக்குப்பல நாணயங்கள் கிடைத்தன. இவற்றை அளித்தவர் திருமதி சோமாவதி வடிவேலு அவர்களாகும். இவற்றில் பழை யது ஒரு வட்டவடிவினதாகிய ரோமநாண யமாகும். கந்தரோடை, மாந்தை போன்ற இடங்களோடு ஈழத்தின் பலபகுதிகளிலும் ரோம நாணயங்கள் கிடைத்திருப்பதால் இங்கு இவை கிடைத்தது ஆச்சரியப்படத் தக்கதொன்றன்று. அடுத்தாற்போல் பெண் சிங்கத்தை ஒருபக்கத்திலுள்ள ஒரு நாண யமும் கிடைத்தது. 'கொட்றிங்கன்' போன்ற நாணயவியல் மேதைகள் இதை மகாசே னன் காலத்தவை எனக்கூறி இதன்காலம் கி. பி. 4-ம் நூற்றுண்டென்பர். இத்தோடு 12-ம் 13-ம் நூற்றுண்டு சிங்கள மன்னர் கள் நாணயங்களும் நமக்குக் கிடைத்துள் ளன. இவற்றுள் சாகசமல்ல, புவனேகபாகு விஜயபாகு, பராக்கிரமபாகு ஆகியோர் காலத்து நாணயங்கள் குறிப்பிடத்தக்கவை. இவ்வாறு நாணயங்களைமட்டும் சான்றுக வைத்து இப்பகுதியின் ஆதிக்குடியேற்றம் பற்றி ஆராய்ந்தால் கிறிஸ்தவ சகாப்தத் திலிருந்தே இங்கு மக்கள் குடியேறியதை இலட்சுமி தகடுகள் பின்வந்த ரோம, சிங் கள காசுகள் எடுத்துக்காட்டுகின்றன. துர் அதிஷ்டவசமாக இங்கு காணப்பட்டுள்ள மண்மேடுகளில் மிக அழகாக உள்ளனவற் றில் கண்டெடுக்கப்பட்டனவற்றில் உள்ள பானை ஓடுகள், இரும்புக் கழிவுப் பொருட் கள் ஆகியவை ஈழத்து மத்தியகாலத்தை சேர்ந்த சின்னங்களாகவும் பிற்காலத்தில் போத்துக்கேயர் நடமாடியதற்கான சான்று களாகவும் உள.

விஞ்சி ஓடையில் பௌத்த உருவத்தை உள்ளடக்கும் மண்டபத்திற்கான கால்களை நாட்டுவதற்காக துளைகள்கொண்ட கற்க ளும் காணப்பட்டுள்ளன. எவ்வாறுயினும் இப்பிரதேசத்தில் சில பரீட்சார்த்தக் குழி கள்மூலம் அகழ்வு மேற்கொள்ளுதல் அவ சியம். அத்துடன் சிறுசிறு மலைகளாகக் காணப்படும். இம்மண்மேடுகளின் தோற் றம், செயற்பாடுபற்றி புவிசரிதவியல் கண் ணோட்டத்தில் ஆய்வதும் அவசியம்.

அடுத்தாற்போல் நமது ஆய்வில் முக் கியம் பெறுவது கிழக்குக் கரையாகும். இதிலும் வடமராட்சிப் பகுதியிலமைந்த வல்லிபுரம், குடத்தனை, நாகர்கோவில் ஆகி யவை முக்கியமானவை. வழுக்கையாற்றில் கந்தரோடை எவ்விதம் தொல்லியல் களஞ் சியமாகத் திகழ்கின்றதோ அவ்விதமே கிழக்குக்கரையில் வல்லிபுரமும் ஒரு தொல் லியல் களஞ்சியமாகும். இவ்விடத்தில் கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முந்திய ஒருசில நூற்றுண்டுகளில் வழக்கிலிருந்த புராண நாணயங்களை போல்பீரிஸ் தமது ஆய்வில் கண்டெடுத்தது, இப்பகுதி கிறிஸ்தவ சகாப் தத்துக்கு முன்பு ஒருசில நூற்றுண்டுகளா வது மக்கள் நடமாட்டமுள்ள பகுதியாக விளங்கி இருத்தல் வேண்டும் என்பதை எடுத்துக்காட்டியுள்ளது. இத்தகையதொரு கருத்தினை அண்மையில் நாம் குடத்தனையில் மேற்கொண்ட ஆய்வின்போது கண்டெடுக் கப்பட்ட 'புராண' நாணயமொன்று எடுத் துக் காட்டியுள்ளது. வல்லிபுரத்தின் பழ மைக்கு இங்கு கண்டெடுக்கப்பட்ட ஆதி நாணயங்களோடு கி. பி. 2-ம் நூற்றுண் டைச் சேர்ந்த பொற்சாசனமும் உறுதி பகர்கிறது. இவற்றைவிட இவ்வல்லிபுரத் திருத்தல வழிபாட்டு முறையும் இப்பிரதே சத்தின் பழமைக்கு சிறந்த உரைகல்கூட நிகண்டில் வல்லியம் என்றுல் ஆயர் என்ற பொருளுண்டு. புரம் என்றுல் கோவில் என்ற பொருள்தரும். எனவே வல்லிபுரம் என்பது ஆயர்கள் கோவில்அமைந்த இட மாகும். இவ்வாயர் பெருமான் வேறுயாரு மல்ல — மாயவனே. இம்மாயவன்தான் சங்கத்தமிழ் இலக்கணமாம் தொல்காப்பி

ம்கூறும் - தமிழரின் முதற்கடவுள் மாயவ ரும். வடநாட்டு ஆரிய செல்வாக்கினுல் இம்மாயவன்தான் பின்பு விஷ்ணுவோடு சங்கமமாயினுன் என்பது வரலாறு. ஏற் கனவே குறிப்பிட்டது போன்று புன்னுலைக் கோவிலுக்கு அண்மித்துக் காணப்படும் கறுப்புசிவப்புநிற மட்பாண்டங்களும் இதன் எதிரே காரைநகரில் கண்டெடுக்கப்பட்ட கறுப்பு சிவப்புநிற மட்பாண்டங்களு இக் காலப் பகுதியில் பெருங்கற்கால திராவிடர் நடமாட்டத்திற்கான மறுக்கமுடியாத தட யங்கள். புன்னுலை மாயவன்போன்றே வல்லி புர மாயவனும் கடற்கரையில் கோயில் கொண்ட வள்ளங்கள்.

ஈழத்தின் பிராமிக் கல்வெட்டுக்களில் 'ஆயர்' என்ற இடையர் வகுப்பினரே 'அய' என வந்ததை குறிப்பிடத்தக்கது. (Sitrampalam S. K. 1980) சங்ககால சமுக பிரிவில் ஆயர் ஒரு முக்கியபகுதியினர். எனவே இன்று இப்பிராந்தியத்தில் மேலாய் வில் ஈடுபடும்போது மந்தை மேய்க்கும் கூட்டத்தினர் எம் கண்ணெதிரே தென்படு தல் பொது வழக்கு. இத்தகையதொரு கூட்டமே ஆதியில் கிறிஸ்து சகாப்தத்திற்கு முந்திய ஒருசில நூற்ருண்டுகளில் வாழ்ந் திருக்கலாம் என்பதை இங்கு நிலைத்திருக் கும் கிருஷ்ணன் வழிபாடும் ஏனைய ஆதி கால நாணயங்களும் எடுத்துக்காட்டுகிறது.

செல்வச் சந்நிதியும் வடமராட்சியில் ஒரு முக்கிய பகுதியாகும். இங்கு கடற் கரையில் கோவில்கொண்டிருக்கும் முருக னுக்கு நடைபெறும் வழிபாடு சங்ககாலத் தில் 'வேலன்' எனப்பட்ட குருமாரால் மேற்கொள்ளப்பட்ட கந்தழி வழிபாட்டை அறிவுறுத்துகிறது. இவ்வழிபாட்டிற்கும் கதிர்காம வழிபாட்டிற்கும் நெருங்கிய ஒற் றுமை உண்டு. செல்வம் என்பது எல்லாம் என்பதின் திரிபு எனக்கொண்டால் ஒளி படர் இடமாக கதிர்காமத்தைப்போல் இது வும் விளங்கியது என்பது தெளிவு. முருகன் ஒளிக்கடவுள் அல்லவா? தொல்காப்பியம் மாயவனுக்கு அடுத்து சேயோனையே முக்கிய கடவுளாக விழிக்கிறது. ஈழத்து ஆதிக்கட வுளரினும் மகாவம்சத்தில் விஜயன் கதை யில்வரும் உப்புலவன் (நீலத்தாமரை நிறத் தவன்) உண்மையில் இங்கு நிலைபெற்ற மாயவன் வழிபாடு பற்றிய குறிப்பே.

மாயவனுக்கு அடுத்து இன்றும் சிங்கள மக்கள் முக்கிய கடவுளாக வழிபடுவது கதிர்காமக் கடவுளையே. இவ்வாறு நோக் கும்போது பெருங்கற்கால பண்பாடு வழி வந்த சங்கத்தமிழர் வழிபாட்டுத் தெய்வங் களின் ஆதிவணக்கத்திற்கான சான்றுகளை இவ்விடத்தில் நாம் காணமுடிகிறதெனக் கொண்டால் பிழையாகாது.

குடத்தனையின் பழமையை எமது மேலாய்வின்போது கிடைத்த புராண நாணயமொன்று எடுத்துக்காட்டியுள்ளது. இந்நாணயம் ஏனைய நாணயங்களைப் போன்று கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முந்திய ஒருசில நூற்ருண்டுகளில் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் புழக்கத்தில் இருந்த பழைய நாணயமாகும். இதன் ஒருபக்கத் தில் சக்கரம் மிருகம்போன்ற சின்னங்கள் மட்டுமே காணப்படுகின்றன. மறுபக்கத்தில் எதுவித சின்னங்களும் இல்லை. பொதுவாக மறுபக்கத்தில் சின்னங்கள் இல்லாத நாண யங்களை காலத்தால் முந்தியவை என்பர் அறிஞர். இப்பின்னணியில் பார்க்கும்போது குடத்தனையின் வரலாறுகூட கிறிஸ்தவ சகாப்தத்தின் ஆரம்பத்திலேயே தொடங்கி யிருக்கலாம் என்பதை ஏற்றுக்கொள்ளலாம். எமது ஆய்வில் பள்ளிக்கூட சிறுவர்கள் அதிக அக்கறை காட்டியுள்ளனர். பலவகை யான பலவித அளவுள்ள டச்சு, ஆங்கில அரசகால நாணயங்கள் பலவும் எமக்குக் கிட்டியது. இச்சேகரிப்பில் குறிப்பிடத்தக் கது. யாழ்ப்பாண ராட்சியத்தின் நாணய மாகிய 'சேது' நாணயமாகும் இம்மாவட் டத்தின் பல பகுதிகளிலும் இவை கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இந்நாணயம் இப் பிராந்தியத்தில் தனிக்கொடியுடன் நந்தியை தமது நாணயத்தில் பொறித்து அதன்கீழ் 'சேது' என்று தமிழில் வாசகம் எழுதி வைத்த தமிழரசின் ஒப்பற்ற அழிவற்ற நாணய சான்ருகும். இம்மன்னர்கள் ராமேஸ்வரப் பகுதியிலுள்ள சேதுவை தமது புனித பூமியாக கருதியதால் போலும்

'சேது" என நாணயங்களில் வாசகத்தை பொறித்தனர்.

அடுத்தாற்போல் முக்கியம் பெறுவது தான் நாகர்கோவில் ஆய்வாகும். நாகர் வடபகுதியில் வாழ்ந்ததையும் அவர்களின் ஆதிவழிபாடு நாகவழிபாடு என்பதையும் இன்றும் எடுத்தியம்பும் தலம்தான் இதுவாகும். நாகவழிபாடு பின்பு 'தம்பிரானை' சிவவழிபாட்டோடு சங்கமித்து வளர்ச்சி பெற்றாலும்கூட நாகவழிபாடு இப்பிராந்தியத்தின் அசையாத ஆதிவழிபாடு. பண்டைய சேரநாடாகிய இன்றைய கேரளத்தில் இன்றும் செல்வாக்கு பெற்றது இவ் வழிபாடு என்பது ஈண்டு நினைவுகூரற்பாலது. இப்பகுதியிலும் பல்வகையான டச்சு நாணயங்கள், விஜயபாகு நாணயம், மீன்பொறித்த பாண்டியகாசு, ஆங்கிலேய நாணயங்கள் பலவும் எமது ஆய்வின்போது அன்பர்கள் தந்துதவினர்.

வல்லிபுரம், குடத்தனை, நாகர்கோவில் ஆகிய பகுதிகளில் உள்ள சிறப்பு யாதெனில் இவை மணல் மேடுகளாக - வெண்ணிற மணற்கும்பிகளாகப் பல மைல் தூரத்தில் காட்சி தருவதே. இத்தகையதொரு நிலையைத்தான் மேற்குக் கரையிலும் மண்ணித்தலை, வெட்டுக்காடு போன்ற இடங்களிலும் காணமுடிகிறது.

இவற்றோடு ஒப்பிடும்போது வேலணைப் பகுதியிலும் விசேடமாக சாட்டி பகுதியும் மேலாய்வுக்கு உட்படும்போது இவற்றிடையே இன்றும் இழைவிட்டோடும் ஒரு பொதுத் தன்மையைக் காண முயலலாம். தென்மராட்சியில் வெற்றிலைக் கேணி, சுண்டிக்குளம் ஆகியவையும் இத்தகையவையே. இருந்தும் இங்கெல்லாம் பொதுவாகக் கறுப்பு சிவப்பு மட்பாண்டங்கள், சிவப்புநிற மட்பாண்டங்கள், சாம்பல் நிற மட்பாண்டங்கள் போன்றவை சாதாரணமாகக் கிடக்கின்றன.

இக்கறுப்பு சிவப்புநிற மட்பாண்டங்களை ஆராயும்போது இவை கலாசார ரீதியில் பெருங்கற்கால பண்பாட்டிற்குப் பிந்தியதொரு நிலையையும் வரலாற்றுக் காலத்தில் கிறிஸ்தவ சகாப்தத்தின்போது வழக்கிலிருந்ததையும் காட்டுகின்றன. பெருங்கற்காலப்பண்பாட்டு மட்பாண்டங்களில் காணப்படும் வினைத்திறனையோ அல்லது அவற்றில் சிறப்பு வாய்ந்த வடிவங்களையோ இவற்றில் காணமுடியவில்லை. எனவே, கறுப்புச் சிவப்பு நிறம் வரும் வண்ணம் சுடும் முறை வழக்கிலிருந்ததைக் காட்டும் அதே நேரத்தில் இப்போதைய ஆய்வில் இவற்றை பெருங்கற்காலப் பண்பாட்டோடு சேர்ப்பது ஒரு கேள்விக்குறியாகவே அமைந்துவிடுகிறது.

இவ்விதம் சேர்ப்பது ஈமச்சின்னங்களோடு தொடர்புடைய இப்பண்பாட்டுக்கு நாம் கொடுக்கும் தவறான வியாக்கியானத்தையே எடுத்துக் காட்டும். வெறும் மட்பாண்டங்களை மையமாக வைத்து, ஈமச்சின்னங்கள் காணப்படாத இடத்து எடுத்த எடுப்பின் பெருங்கற்காலம் எனக் கூறுவது அறிஞர் உலகினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்தன்று.

அத்துடன் குறிப்பாக மண்ணித்தலை, குடத்தனை ஆகிய இடங்களில் போத்துக்கேயர் உபயோகித்த சுங்கான் போன்றவை கிடைத்தன. போத்துக்கேயர் காலம்வரை இவை மக்கள் நடமாட்டத்திற்குரிய பிரதேசங்களாக விளங்கியவை தெளிவாகிறது. இருந்தும் இப்பகுதியில் கிடைத்த நாணயங்கள் குறைந்தது கிறிஸ்தவ சகாப்தத்தின் ஆரம்பத்திலாவது மக்கள் நடமாட்டம் இப்பகுதியில் ஆரம்பமாகிவிட்டதென்பதை எடுத்துக்காட்டுவதும் இவற்றை இன்னும் மட்பாண்ட ஆய்வு மூலம் நிரூபிக் வேண்டின் குறிப்பிட்ட இடங்களிவ் பரிசோதனை ஆய்வும் குழிகள் இட்டு அகழ்வாய்வு மேற்கொண்டால்தான் நல்ல பலன் கிடைக்கும். வெறும் மேலாய்வுமூலம் திட்டவட்டமான எந்த முடிவுக்கும் நாம் வந்துவிடமுடியாது.

இச்சந்தர்ப்பத்தில் வல்லிபுர பிரதேசத்தில் கடந்த நூற்றாண்டில் குறிப்பாக 1846ல் கிடைத்த 7000 நாணயங்கள்பற்றி நாம் குறிப்பிடாமல் இருக்கமுடியாது. (*J. R. A. S. V. I. 1 No3*) இவை ஒரு மனித

சடலத்தோடு முட்டியில் புதைக்கப்பட்டிருந் தன. இதுபற்றிய விபரமோ அல்லது இந் நாணயங்கள் எங்குள்ளன என்பது பற்றிய விபரமோ நமக்குக் கிடைக்கவில்லை. இவை தெல்லாம் நம்மவர் நம் பாரம்பரியத்தில், பழமையில் கொண்டுள்ள அசிரத்தையை யும் பாராமுகத்தையுமே காட்டுகின்றன.

இத்தகைய அசிரத்தையினுல்தான் வல்லிபுரம். மணற்காடு, குடத்தனை, நாகர் கோவில் தீவுப்பகுதிகளில் சாட்டி போன்ற இடங்களிலுள்ள மண்மேடுகளும் அவற் ருேடு சேர்ந்துள்ள வரலாற்றுப் பொக்கிஷங் களும் நம்மவர்களால் தினம் தினம் அழிக் கப்படுகின்றன.

இத்தகையதொரு அழிவின் போது கிடைத்த ஒரு வரலாற்றுச் சான்றுதான் ஆனைக்கோட்டை மண்மேடு. இதில் பெரும் பாகம் அழிக்கப்பட்டுவிட்டது. இதனுல் இக் குடாநாட்டிற்கான பழமையான தடயங்கள் பலவும் அழிக்கப்பட்டன என்பதை யார் உணர்வர்? யாழ்ப்பாணப் பேரரசின் தலைநக ரான நல்லூர் இன்று அழிக்கப்படுகிறது. வரலாற்று உணர்வுடன் ஒரு சமூகம் வாழும் போதுதான் அதற்கான எழுச்சியும் உண்டு என்பதை யார் மறுப்பர். இனியாவது இத் தயை சின்னங்களோ அன்றி நாணயங்களோ கிடைக்கும்போது யாழ். வரலாற்றுத்துறை யின் ஓர் அங்கமாகிய தொல்லியற் துறைக்கு அறியத்தரின் இம்மாவட்டத்தின் உயர்கலைப் பீடத்திலுள்ள நூதனசாலையில் இவற்றைப் பேணிப் பாதுகாப்போம் என்றும் உறுதி தருகிறோம்.

- இத்தகையதொரு நிலை வரும்போது தான் இச்சின்னங்கள் நம் எதிக்கால சந்ததி யினருக்கு நல்ல வழிகாட்டியாய் அமையும்.

## முடிவுகள்

எமது மேலாய்வின் மூலம் ஓரளவு சில முடிவுகளைக் கூறக்கூடியதாக உள்ளது. இம் மாவட்டத்தின் ஆதிக் குடியேற்றம் பெருங் கற்காலப் பண்பாட்டைச் சேர்ந்த மக்க ளோடுதான் தொடங்குகிறது. இவர்களுக்கு முன்பு யக்சர்கள் என மகாவம்சம் விளிக் கும் குருணிக்கற்கால மக்கள் இந்நாட்டில் வாழ்ந்ததற்கு பெருங்கற்காலப் படைக்குக் கீழ் இவர்கள் உபயோகித்த ஆயுதங்கள் பற்றி அனுராதபுரத்தில் கிடைத்த தகவல் கள் எடுத்துக்காட்டுகின்றன.

இவ்வாயுதங்கள் தமிழ்நாட்டில் வாழ்ந்த குருணிக்கற்கால மக்களோடு பெருமளவு ஒத்துக் காணப்படுவதால் தமிழ்நாட்டு குரு ணிக் கற்கால மக்கள் ஈழத்திலும் பரந் திருக்கலாம் எனக் கொள்ளலாம். தமிழ் நாட்டின் தென்கோடிக்குக் கிட்டவுள்ள பிராந்தியம் மட்டுமல்லாமல் சீதோஷ்ண நிலையிலும் அதோடு ஒத்த ஒரு பிராந்திய மாக யாழ். மாவட்டம் காணப்படுவதால் இம்மக்கள் ஏன் யாழ். மாவட்டத்தில் கால் வைக்கவில்லை என்பது இற்றைவரை ஒரு புதி ராகவே காணப்படுகிறது. இதற்கும் பல காரணங்கள் இருக்கலாம்.

ஒன்று இதுபற்றிய முடிவான ஆய்வு இற்றைவரை நடைபெருமை. இரண்டாவது இம்மக்கள் உபயோகித்த கல்லாயுதங்களின் மூலப்பொருட்களாகிய குவாட்ச் என்ற கனிப்பொருள் இப்பகுதியில் காணப் படாமை; அல்ஜின் தம்பதிகள் இம்மாவட் டத்தில் இவ்வாயுதங்கள் ஓரிடத்தில் காணப் பட்டதாகக் கூறும் தகவல்கள் உண்மையில் திருகோணமலையை மனதில்வைத்தே கூறி யுள்ளனர் என்பதை திரு. செரன் தெரணி யாகலை அவர்கள் நமக்கு அறியத்தந்துள் ளார்.

இதற்கு அடுத்தாற்போல் வருவதுதான் பெருங்கற்காலம். யாழ். மாவட்டத்தின் வழுக்கையாறு இதன் மையப் பிரதேசமாக அமைந்துள்ளது. கந்தரோடை, ஆனைக் கோட்டை ஆகியவற்றில் கிடைத்த சான்று கள் பி. மு. 4ம் - 5ம் நூற்றுண்டுகளிலாவது இப்பகுதியில் இம்மக்கள் நடமாடினர் என் பதை உறுதிப்படுத்துகின்றன.

இக்காலத்தை அண்டிய குடியிருப்புகள் புன்னலை, களபூமி, மழவை ஆகிய இடங் களில் ஆரம்பித்திருக்கலாம் எனக் கொள்ள லாம். வேலணை, சரவணை ஆகியவை ஆனைக் கோட்டைக்கு நேர் எதிரில் இருப்பதால் ஆனைக்கோட்டை போன்றே இப்பகுதியிலும் ஆரம்பக் குடியேற்றங்கள் நடைபெற்றிருக்க

லாம் என்றுகொள்வது தர்க்கரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு கருத்தாக இருந்தாலும் கூட இங்கு காணப்படும் தொல்லியல் சான்றுகள் (அதுவும் மேலாய்வின் மூலம் பெறப்பட்டவை) கிறிஸ்துவ சகாப்தத்தை அண்டியுள்ள காலப்பருதியில்தான் இங்கு குடியிருப்புகள் தோன்றியிருக்கலாம் என்பதை வலியுறுத்துகின்றன.

இத்தகையதொரு நிலையே மண்ணித்தலை, வெட்டுக்காடு, நாகர்கோவில். குடத்தனை, வல்லிபுரம்போன்ற கரையோரப்பகுதியிலும் வெற்றிலைக் கேணி போன்ற இடங்களிலும் கிடைத்த சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன, எனினும் இத்தகைய முடிவுகள் மேலாய்வுமூலம் பெறப்பட்டவையே. வெறும் மேலாய்வை மையமாகவைத்து அவசரமாக எந்த முடிவுக்கும் நாம் வருவது பிழை. பரீட்சார்த்தரீதியான அகழ்வுகள் இவைபற்றி மேலும் பல விபரங்களைத் தரும்.

எமது மேலாய்வின் பெறுபேறாக ஆரம்ப குடியேற்றங்கள் கடற்கரைப் பிரதேசத்தை அண்டியிருந்ததையும், நீர் வசதி, சுலபமாகப் பண்படுத்தக் கூடிய மண் ஆகியவை இவற்றைத் தேர்ந்தெடுப்பதில் முக்கிய இடத்தைப் பெற்றதையும் உறுதிசெய்கின்றன. செம்மண் பிராந்திய குடியிருப்புகள் மிக மிகப் பிற்பட்ட காலத்தில்தான் நடைபெற்றிருக்கவேண்டும் என்பதை இங்கு அருகிக் காணப்படும் தொல்லியல் சான்றுகளோடு யாழ்ப்பாண வைபவமாலை, கைலாய மாலை போன்ற இலக்கியச் சான்றுகளும் எடுத்துக்காட்டுகின்றன.

கடின மண்ணும் மிக ஆழமாகப் பெறப்பட்ட நீர்நிலைகளும் போதிய வசதிகளற்ற ஆதிகாலத்தில் மக்களால் ஆக்கிரமிக்கப்படாத பிரதேசங்களாகவே இருந்தன. பொதுவாக பெருங்கற்காலமக்கள் குளத்தை மையமாகவைத்து வாழ்வை வளம்படுத்தினாலும்கூட யாழ். மாவட்டத்தின் தரைத்தோற்றம் இயற்கையாக ஒரு பகுதியில் நீர் தேங்கிவந்து நிற்கவும் மிகக் குறைந்த சிரமத்தில் இந்நீரைப் பாதுகாப்பதற்கு ஏற்ற வாய்ப்புகள் இல்லாத பிரதேசமாக இருந்தது. இதனால்தான் கிணற்று நீரில்மட்டும் வாழவேண்டிய மக்களுக்கு கரையோரப் பிரதேசம்- செம்மண் பிரதேசங்களைவிட வாய்ப்பான ஒரு இடமாக அமைந்தது. ஆனால் இத்தகையதொரு நிலை அநுராதபுரம் போன்ற மாவட்டங்களில் காணப்படவில்லை.

செம்மண் பிராந்தியமாகிய இதில் இயற்கையாகவே நீர் தேங்கிநிற்கக்கூடிய விதத்தில் தரைத் தோற்றம் அமைந்திருந்ததால் ஆரம்பத்திலே இருந்து முழுக்க முழுக்கக் குளங்களை மையமாக வைத்து இச்செம்மண் பிராந்தியத்தில் மக்கள் பரவல் ஏற்படத் தொடங்கின.

இப்பின்னணியில் இலக்கிய ஆதாரங்கள் இம்மாவட்டக் குடியேற்றம் பற்றிக் குறிப்பிடும் தகவல்களைச் சற்று விரிவாக ஆராய்வது பலனுடையதாகும்.

யாழ்ப்பாண வைபமாலை போன்ற நூல்கள் இப்பிராந்தியத்தின் குடியேற்றம் கி.பி. 8–ம் நூற்றாண்டில் வாழ்ந்த யாழ்பாடியினால் ஆரம்பிக்கப்பட்டது எனக்கூறுவது பொருத்தமற்ற தொன்றாகவே காணப்படுகின்றது. இவ் யாழ்பாடிக்கதை கி. பி.16ம் நூற்றாண்டில் வாழ்ந்த அந்தகக் கவிவீரராகவர் கதையைப் பின்பற்றி எழுந்தது மட்டுமன்றி 13-ம் 14-ம் நூற்றாண்டுகளில்தான் இம்மாவட்டத்திற்கு இடப்பட்ட மணவை மணற்றிடர் போன்ற பெயர்களையும் இணைத்து எழுந்தது என்பர் அறிஞர். (இந்திரபாலா . கா. 1972) அத்தோடு ஏற்கனவே ஆராய்ந்த தொல்லியல் சான்றுகள் ஆதிக் குடியேற்றம் யாழ்பாடியோடோ அன்றி கி. பி. 8–ம் 9-ம் நூற்றாண்டுகளில் வாழ்ந்ததாக நம்பப்படும் உக்கிரசிங்கன் மாருதப்புரவல்லி கதைகளிலோ இல்லை என்பது தெளிவாகின்றது. எனினும் பாளி நூலாகிய மகாவம்சம் இப்பிராந்தியத்தின் பழமைபற்றித்தரும் ஆகப்பழைய இலக்கிய சான்றை நாம் ஆராயாமல் விடமுடியாது.

மகாவம்சத்தில் கி. மு. 6-ம் நூற்றாண்டில் இங்கு (நாகதீபத்தில்) மகோதர, சூளோதர என்ற அரசர்கள் சிம்மாசனம் வேண்டிப் போரிட்டதையும் அப்போது புத்தபிரான் தமது இரண்டாவது விஜயத்தின்போது இவர்கள் சண்டையை சமாதானப்படுத்தியதாகவும் கூறுகிறது. இத்தகைய

தகவல்களைத்தான் ஒருவிதத்தில் கி. பி. 3-ம் நூற்றுண்டைச் சேர்ந்ததாக நம்பப்படும் மணிமேகலையும் தருகிறது. மணிமேகலையில் மணிபல்லவம்பற்றி பேசப்படுகிறது. இம் மணிபல்லவம் யாழ்மாவட்டத்தைக் குறிக் கிறதென்பர். இராசநாயகம் முதலியார், மணிமேகலையிலும் மணிமேகலை புத்தபீடியை வணங்கியது பற்றிய குறிப்பு வருகிறது. அத்துடன் மணிமேகலையில்

'மணிபல்லவத்திடை மணிமேகலை தா
வெண்மணற் குன்றமும் விரிபூஞ் சோலையுங்
தண்புனற் பொய்கையுந் தாழ்ந்தன நோக்கி
எனவரும் குறிப்பும்

"துறையும் துறைசூழ் நெடுமணற் குன்றமும்" எனவரும் குறிப்பும் இப்பிராந்தியத்தில் நாகர்கோவில், வல்லிபுரம்,வேலணை காரைநகரிலுள்ள வேரப்பிட்டி போன்ற இடங்களை எம்மனக்கண் நிறுத்துகின்றன. வல்லிபுரத்திற்கூட கி. பி. 2-ம் நூற்றுண்டைச்சேர்ந்த பொற்சாசனம் ஒரு பௌத்த ஸ்தூபிபற்றியே பேசுகிறது. வேலணையிலுள்ள குறும்பிட்டியா காரைநகரில் உள்ள வேரப்பிட்டி ஆசியவற்றின் அழிபாடுகளும் இக்காலத்தில் பௌத்த ஸ்தூபிகள் இங்கு இருந்ததை எடுத்துக்காட்டுகின்றன. எனவே மணிமேகலைச் செய்தி திராவிட மொழி பேசிய மக்களில் ஒருபகுதியினர் பௌத்த மத செல்வாக்கிற்கு உட்பட்டதை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

இந்தநாட்டில் வாழ்ந்த தமிழ்க்குடிகள் எவ்வாறு பௌத்த மதத்தை ஆதரித்து பாளிமொழி செல்வாக்கால் தமது பெயரையே மாற்றினர் என்பதற்கு தலைசிறந்த உதாரணமாக வவுனியா மாவட்டத்தில் உள்ள பெரிய புளியங்குளத்தில் கிடைத்துள்ள பிராமிக் கல்வெட்டு சான்றுபகர்கின்றது. இக்கல்வெட்டின் காலம் கி. மு. 2, 3-ம் நூற்றுண்டாகும்(*Paranavitane 1970*) இதில் தமிழ்வணிகனுகிய விசாகன் பௌத்த மதத்திற்கு கொடுத்த கொடைபற்றிக் கூறப்பட்டுள்ளது. வணிகன் 'தமிழ' என இக்கல்வெட்டில் அவன் பேசிய மொழியின் பெயரால் அழைக்கப்படுவதை நோக்கும் போது தமிழுக்கே உரிய சிறப்பான எழுத்தாகிய 'ழ' கரத்தை உச்சரிக்கும் மக்கள் இப்பகுதியில் வாழ்ந்தார்கள் என்பது தெளிவாகிறது. இங்கே குறிப்பிடப்படும் 'தமிழ' என்ற பதம் உண்மையில் தமிழின் முதல் வடிவமாகும். எனவே இக்கல்வெட்டில் இருந்து திராவிடர்கள் அவர்களில் தமிழை தாய்மொழியாகக் கொண்ட ஒரு பகுதியினர் பௌத்தத்தை ஆதரித்தது தெரிகிறது. வல்லியுர பொற்சாசனம் ஒரு பௌத்த விகாரையைக் குறித்தாலும்கூட அதில்வரும் 'படகரை' என்றபதம் உண்மையில் 'வடகரை' என்றதன் பிராகிருத வடிவம் என்பதும் இசிகிரிய என்றபெயர்கூட 'ராயன்' போன்ற பெயர்கள் பெற்ற திரியின் வடிவமே எனக்கொண்டால் பிழையாகாது. எனவே இக்காலத்தில் வடகரை முக்கியமாக வல்லிபுரத்தை மையமாக வைத்து தனி சிற்றரசாக விளங்கியிருக்கலாம் எனக்கொண்டால் பிழையாகாது. எனவே வல்லிபுர பொற்சாசனமும் தமிழர் பௌத்தத்தைத் தழுவியதை எடுத்துக்காட்டுகின்றது எனக் கொள்ளலாம்.

எமது தொல்லியல் மேல் ஆய்வும் வழுக்கை ஆற்றுப் பகுதியில் ஆனைக் கோட்டை கந்தரோடை ஆகிய இடங்களில் நடைபெற்ற அகழ்வும் யாழ்மாவட்டம் குறைந்தது கி. மு. 4-ம் நூற்றுண்டிற்கு முன்பே திராவிட மக்கள் வாழ்ந்த இடமாக விளங்கியதை உறுதிப்படுத்துகின்றது. இதனுல் மகாவம்சத்திலும் மணிமேகலையிலும் இப்பிராந்தியம்பற்றி வரும் குறிப்புகள் இங்கு நிலைபெற்றிருந்த ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சிற்றரசுகள் பற்றிய ஒரு மரபையே பிரதிபலிக்கின்றன எனக் கொள்ள இடமிருக்கிறது. இச்செய்திகள் மட்டுமன்றி சம்மோக வாகினி என்ற மிகப் பழைய பாளி நூலில்கூட கி. மு. 4-ம் நூற்றுண்டில் நாகதீபத்தைக் கண்ட ஒருகண் குருடுடைய மன்னன்பற்றிக் குறிப்பு வருகின்றது.

மணிமேகலை இப்பகுதியை "நாக நாடு" என அழைக்க மகாவம்சமும் வசபனின் கல்வெட்டும் 'நாகதீப' என அழைக்

கின்றன. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த மிகுந்தலையில் உள்ள பிராமிக் கல்வெட்டொன்று 'தீபராஜ' பற்றி பேசுகிறது. இக்கூற்று 'நாகதீப' மன்னனையே குறித்து நின்றதென்பர் பரணவிதான. அத்துடன் நாம் பேசும் ஆதிக்குடியேற்ற காலத்தில் பரந்த அளவில் நாகதீபம் தற்போதய வடமாகாணம் அநுராதபுர மாவட்டம் புத்தளம், சிலாபம் ஆகிய பிராந்தியங்களைக் குறித்து நின்றது என்பதை பாளிநூல்கள் எடுத்துக் காட்டுகின்றன. இப்பகுதி நாக தீபம் "என அழைக்கப்பட இதன் தென்பாலுள்ள பகுதி "இரத்தின தீபம்" என அழைக்கப்பட்டது. வரலாற்றுக் காலத்தில் அநுராதபுரநகரில் ஆட்சிசெய்த சிங்கள மன்னர் பட்டியலில் 'நாக" என விகுதியுடன் முடிவடையும் பெயர்கள் பலவும் காணப்படுகிறது. ஏன் ஈழத்தின் ஆதிப் பிராமிக் கல்வெட்டுக்களில் கூட நாகர்கள் பெயர்கள் பல இடங்களில் குறிப்பிடப்படுகின்றன.

மேற்கூறிய கருத்துக்களை மனதில் கொள்ளுவது அவசியம் மென்டிஷ் (*Mendis* 1965) பரணவிதான போன்றோர் இவர்களை அமாஷ்யர்கள் அதாவது மனிதரில்லாத கூட்டத்தினர் எனக் கூறியது வியப்பாக உள்ளது. யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம் பற்றிக் கூறவந்த பரணவிதான இப்பிராந்திய ஆதிக்குடிகளான நாகர்கள் பற்றிக் கூறியது இங்கே குறிப்பிடத்தக்கது. அவர் மகாவம்சம், மணிமேகலை போன்ற நூல்களில் மட்டுமன்றிப் பொதுவாக பழைய பாளி சமஸ்கிருத இலக்கியங்களில் நாகர்கள் மனிதர்களாக சித்தரிக்கப்படவில்லை என்றும் உண்மையில் இவர்கள் அமாஷ்யர்களாகவே சித்தரிக்கப்பட்டு பாதாள உலக வாசிகளாகவும் குறிப்பிடப்பட்டு இவர்களின் இயல்பான தோற்றம் பாம்பாக இருந்ததாகவும் ஆனால் நினைத்த மாத்திரத்தில் எத்தோற்றம் பெறும் சக்தி படைத்திருந்தார்கள் எனவும் எடுத்துக் காட்டி ஈழத்தில் உள்ள நாகதீபம் கல்யாணி போன்ற இடங்கள் இவர்கள் வாழ் இடங்களாக குறிப்பிடப்பட்டாலும் இவர்கள் மனித பிறவியினரல்லர் என்பதை கௌதம புத்தர் இங்கு மேற்கொண்ட விஜயங்களின் போது இங்கு பிறவியினர் இல்லாதிருந்தனர் என மகாவம்சத்தில் வாழ் கூற்று உறுதிப்படுத்துகின்றது என்றும் இன்றோர் இடத்தில் நாகர்களை மனித பிறவியினர் எனக் கொண்டாலும் கூட எக்காரணம் கொண்டும் இவர்களை திராவிடர் எனக் கொள்ள முடியாதென்றும் விளக்கியுள்ளார் (*Paranavitana* 1961). ஆனால் இவருக்கு ஈழத்தின் ஆதிக்குடிகள் பற்றியிருந்த தடுமாற்றத்தை இலங்கை பல்கலைக்கழக வரலாற்று நூலில் எழுதிய கட்டுரையொன்று எடுத்துக்காட்டுகின்றது. அதில் இந்நாட்டில் இன்று சிங்களம், தமிழ்மொழி பேசியோரின் பெரும்பான்மையினர் இந்தக் கற்கால ஆதிக்குடிகளின் வழித்தோன்றல்கள் என்றும், இவர்கள் பற்றி விரிவான தகவல் எமக்குக் கிடைக்கவில்லை என்றும் எடுத்துக் காட்டித் தமக்குக் காணப்பட்ட மயக்கத்தைப் புலப்படுத்தி உள்ளார் (*Ray* 1959).

ஆனால் இந்நாகதீபத்தில் கிடைத்த தொல்லியல் சான்றுகளை விரிவாக ஆராயும் போது நாகர்கள் வாழ்ந்த பிராந்தியம், (ஏன் மகாவம்சம், தீபவம்சம் போன்ற பாளி நூல்களில் விஜயன் ஆதியில் வந்து கால்வைத்துப் பின்பு அநுராதபுரத்தில் அரசமைத்ததாக கூறப்படும் இப்பகுதி) ஆதிகாலம் தொட்டு மனித நடமாட்டத்திற்கு உட்பட்ட பகுதியாகவே காணப்படுகிறது. இற்றவரை நமக்குக் கிடைத்த மனித எலும்புக்கூடுகள் விசேஷமாக பொன்பரிப்பு மாந்தை ஆகியன இரண்டும் தெட்டத் தெளிவாக தென்னிந்திய மக்கட்கு பூவினரினதே என்பதை உணர்த்தி உள்ளன. ஆனைக்கோட்டை எலும்புக்கூடு மானிட இயலாளரால் இன்றும் விரிவாக ஆராயப்பட வேண்டி இருந்தாலும் கூட அதில் மாந்தை எலும்புக் கூட்டின் சாயல் இருப்பதும் அவ் எலும்பு கூட்டோடு கிடைத்த முத்திரை குறிக்கும் பெயர் ஆதி திராவிடச் சொல்லாக இருப்பதாலும் மானிட இயல் சான்றுகளை ஒப்பிட்டு ஆராயும்போது நாகர்கள் மனிதர்களே என்பதும் ஆதி திராவிடர் என்பதும் வெள்ளிடை மலே. இன்றும் யாழ் மாவட்டத்தின் பல பகுதியில் வழக்கிலிருக்

கும் சங்ககாலத் தமிழர் வழக்கிலிருந்த சொற்கள் பல இந்த உண்மையை மேலும் உறுதிப்படுத்துகின்றன. இதுபற்றி விரிவான ஆய்வு நடத்தப்படவேண்டும், என்றாலும் ஒரு சில உதாரணங்கள் மூலம் இதை விளக்கலாம். ஐந்து, உது, உவன், அதன் வந்தாரே போன்ற சங்ககால சொற்கள் தமிழகத்தில் வழக்கில் இல்லாவிட்டாலும் கூட இன்றும் யாழ்ப்பாணத் தமிழில் பேசப் படுகின்றன. ஏன் தொல்காப்பியத்தில் பெண்குழந்தையைக் கூட 'மகனே' என அழைத்த வழக்குண்டு. இன்றும் இத்தகைய தொரு வழக்கு யாழ்ப்பாணத் தமிழில் உள்ளது. (*Ray 1959:43*) நாம் மேலாய்வில் ஈடுபடும்போது புங்குடுதீவு, வேலணை போன்ற இடங்களில் பண்டைய சங்கச் சொற்கள் வழக்குபற்றி பல அறிஞரால் எமக்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இது பற்றி ஆராய்ந்தால் நல்ல பலன் கிடைக் கும். இப் பின்னணியில் நோக்கும்போது கடைச்சங்கப் புலவர்களான ஈழத்துப் பூந்தேவனர், முடிநாகராயன் போன்றோர் வடமாகாணத்திலிருந்து தமிழ் வளர்த்த மதுரைக்குச் சென்றிருக்கலாம் என்பது புலனுகின்றது. முக்கியமாக மாந்தை பற்றிச் சங்ககால நூல்கள் குறிப்பதும், சமூகப் பிரிவில் சங்கத் தமிழரின் ஒரு பகுதியின ராகிய கடம்பரை ஞாபகமூட்டும் விதத்தில் மல்வத்து ஓயா என இன்று அழைக்கப்படும் நதி அன்று பழைய பாளி நூல்களில் விளக் கப்படுவதையும் மேலும் உதாரணங்களாக எடுத்துக் காட்டலாம். வவுனியா மாவட் டத்தில் கிடைத்த இரண்டு பிராமிக் கல் வெட்டுகளில் (கி. மு. 2–ம்3ம்நூ. சேர்ந்தது) தமிழ் வணிகன் விசாகன் பௌத்தமதத் திற்குக் கொடுத்த கொடை பற்றிக் குறிப் பிடுகின்றன. இதே காலத்தைச் சேர்ந்த அநுராதபுர கல்வெட்டிலும் தமிழ் வணிகர் பேசப்படுகின்றனர். வவுனியா மாவட்டத் தில் ஏற்கனவே குறிப்பிட்ட பெரியபுளியங் குள கல்வெட்டில் தமிழுக்கே சிறப்பாக அமைந்துள்ள 'ழ' என்று எழுத்து காணப் படுவது தமிழைப் பேசிய மக்கள் கூட்டம் பௌத்தமதத்தை அனுஸ்டித்தவர்கள் இங்கு வாழ்ந்தார்கள் என எடுத்துக்காட்டு கின்றது. ஏன் மகாவம்சம் குறிப்பிடும் வர லாற்றுச் சம்பவங்களான கி. மு. 2–ம் நூற்றுண்டைச் சேர்ந்த சேனன், குட்டிகளும் பின் வந்த எல்லாளன் ஆட்சியும் அன்று கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முன்பு இப் பிராந்தியத்தில் தமிழ் மொழி பேசியோர் வாழ்ந்ததை உறுதிப்படுத்துகின்றன: வவுனியாவில் உள்ள 'மாமடுவ' என்ற கிராமத்தில் காணப்படும் பெருங்கற்கால ஈமசின்ன வகைகள், கற்பதுக்கைகள், கல் வட்டங்கள் ஆகியனவும் இம்மாவட்டத்தில் பழந்தமிழர் பெற்ற செல்வாக்கை எடுத்துக் காட்டுகின்றன. முல்லைத்தீவில் கண்டெடுக் கப்பட்ட ஆதி நாணயங்கள் கந்தரோடை, வல்லிபுரம், குடத்தனை, மாந்தை, அநுராத புரம் போன்ற இடங்களில் காணப்பட்ட ஈழத்தின் ஆதி நாணயங்களை ஒத்துக் காணப்படுகின்றன. இவற்றில் காணப்படும் சின்னங்களிற்கும் பெருங்கற்கால பண்பாட் டைச் சேர்ந்த பானை ஓடுகளில் உள்ள குறி யீடுகளிற்கும் இடையே இளைவிட்டோடும் ஒற்றுமையைக் குறிப்பிடத்தக்கது. இதனுல் ஈழத்தில் இன் நாணயங்களை வெளியிட் டோர் ஆதிதிராவிட மக்களே என்பது புலனுகிறது. அண்மையில் மாந்தையில் மேற் கொள்ளப்பட்ட பரீட்சார்த்த அகழ்வு இப் பகுதியின் ஆதிக்குடிகள் பெருங்கற்காலப் பண்பாடு வழிவந்த திராவிடரே என்பதை உணர்த்தியுள்ளது. ஏன் மகாவம்சம் குறிக் கும் ஈழத்தின் ஆதிப்பெயரான தாம்பிரர்ணி கூடத் தமிழகத்தில் உள்ள பாண்டிநாட்டு நதியாகிய தென் பொருணை அல்லது தண் பொருணையின் பாளி வடிவமே என்பர் அறிஞர். இதனுல் ஆதிக் குடியேற்றம் இப் பகுதியிலிருந்து இங்கு நடைபெற்றிருக்க லாம் என்பது வெளிப்படை. புத்தள மாவட்டத்தில் உள்ள பொன்பரிப்பு ஆதிக்க நல்லுருக்கு நேரெதிரிலமைந்துள்ள தும் இவை இரண்டுக்குமிடையே உள்ள நெருங்கிய ஒற்றுமையை மேலும் உறுதிப் படுத்துகின்றது.

இவ்வாறு நோக்கும்போது ஈழத்தின் ஆதிக்குடியேற்றத்தில் பாண்டிநாடு முக்கிய இடத்தை வகித்தது தெளிவாகிறது. பாண்டி நாட்டில்தான் பழந்தமிழர் நாகரிகம் முத லில் செழித்தது என்பதை கொற்கை

போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகள் உறுதிப்படுத்துவதால் இத் தகையதொரு கருத்து ஏற்கக்கூடியதாகவே இருக்கிறது. விஜயன் கதையிலும் ஏனைய இடங்களிலும் 'பண்டு' என வரும் பதம் பாண்டியரேயே குறித்தது என்பதை நிக்லஸ் போன்ற அறிஞர்கூட ஏற்பதாலும் ஈழத் தின் ஆதிப் பிராமிக் கல்வெட்டுக்களின் பிராமி வடிவம் கூட தென்னாட்டு வரிவடிவ வழிவந்தது என அறிஞர் ஏற்பதாலும், பௌத்தமும் வடஇந்திய பிராமி வரிவடிவ மும் இங்கு புகுத்தப்பட முன்பு அமாஷர் கள் என விபரிக்கப்படும் நாகர் திராவிட மொழி பேசியோராக இருந்தனர் என்பது தெளிவாகிறது. வரலாற்றுக் கால சிங்கள மன்னர் பலர் நாக என விகுதியுடன் முடி வடையும் பெயர்களைச் சூடியிருந்ததை உற்று நோக்கும்போது இக்கால சிங்கள மக்களின் மூதாதையர்கூட ஆதிதிராவிடமொழி பேசி யோர் என்பது தெளிவு. இதைத் தற்கால சிங்கள மொழி தன்மையும் எடுத்துக் காட்டு கிறது. சிங்களம் என்று நாம் காணும் இனம் பற்றி ஆதிப் பிராமிக் கல்வெட்டுக்களில் குறிப்பு இல்லை. இந்நாட்டுக்கு இடப்பட்ட பெயராக இது பழைய பாளி நூல்களிலும் இந்திய இலக்கியம் கல்வெட்டு ஆகியவற் றிலும் கி. பி. 3-ம் நூற்றாண்டுக்குப் பின்பே காணப்படுகிறது.

இவ்வாறு பிந்திய நிலையில் காணப்படும் 'சிங்களம்" என்ற சொல் ஈழத்தின் வழி வந்த சொல்லாகும். எலு என்ற மொழி பேசியதால் ஈழம் என இந்நாடு அழைக்கப் பட்டது. இதனைப் பட்டினப் பாலையில் வரும் 'ஈழத்துணவும் காழகத்து ஆக்கமும்' என்ற குறிப்பும், தமிழ் நாட்டில் திருப்பரம் குன் றத்தில் காணப்படும் ஈழத்துக் குடுமிகன் என்ற குறிப்பும் எடுத்துக் காட்டுகின்றன. எனவே இந்த ஈழத்துக்குச் 'சிறீ' என்ற அடைமொழியைச் சேர்த்ததன் விளைவாகத் தான் ''சிங்களம்'' என்ற சொல் பிறந்து, இது முதலில் நாட்டையும் பின்பு ஒரு மக்கள் கூட்டத்தையும் குறித்தது என்பது தெளிவு. மக்கள் கூட்டத்தைக் குறித்த நேரத்தில் சிங்கத்தைக் கொன்றவன் (சிங்+கல) வழிவந்த இனமே சிங்கள இனம் என்ற நாடோடிக் கதை மரபு மூலம் ஈழத் தில் இருந்து வளர்ச்சியடைந்த சிங்களத் திற்கு விளக்கம் கொடுக்கப்பட்டது. சிங்கள தமிழ் மக்களிடையே மானிடவியலாளர், சமூகவியலாளர் காணும் ஒற்றுமையும் இதை மேலும் வலுப்படுத்துகின்றது.

இவ்வாறுயின் சிங்களத்தின் ஆதிமொழி யாகிய 'எலுவும்' தமிழைப்போல ஒரு திராவிட மொழியே. ஏன் தமிழ்நாட்டிற் கூடத் தொல்காப்பியர் காலத்தில் பற்பல பிராந்தியங்களில் பேசப்பட்ட 12 கிளை மொழிபற்றியும் குறிப்புண்டு. (Meenakshi-sundaram T.P. *1968*) இவற்றில் சில மொழி வழக்குகள் ஏனையோரால் விளக்கப்பட வில்லை. எனவே இந்த எலுவும் இத்தகைய ஒரு பிராந்திய மொழிவழக்காக ஈழத்தில் தமிழுடன் அல்லது வேறு திராவிட மொழி வழக்குகளுடன் புகுந்தது எனலாம். பௌத் தமும், பாளியும் இந்த நாட்டில் புகுத்தப் பட்ட பின்பு ''எலு'' இவற்றின் செல் வாக்கால் வட இந்திய சாயல் பெற்று, தமிழ்போன்ற திராவிட மொழி தன்மையில் இருந்து வேறுபடத் தொடங்கியது. இவ் வாறு பிறந்ததுதான் சிங்கள மொழியாகும்.

எனவே தொல்லியல் நோக்கில் நோக் கும்போது பரணவிதான குறிப்பிடுவது போல் யாழ் மாவட்டத்தில் காணப்படும் தொல்லியல் எச்சங்கள் இத்தீவின் ஆதி காலத்தில் ஏனைய மாவட்டங்களில் காணப் படும் தொல்லியல் எச்சங்களோடு ஒத்தே காணப்படுகின்றன. (Paranavitana *1961*) ஆனால் அவர் கூறுவதுபோலத் தீவின் ஏனைய பகுதியில் காணப்படுபவை வட நாட்டின் ஆதிக்குடியேற்றங்களின் எச்சங்கள் அல்ல. இவை தென்னக மக்களின் எச்சங்களே. இவற்றோடு யாழ் மாவட்ட, வட மாகாண ஆதிதிராவிட மக்களின் எச்சங்களும் ஒத்துக் காணப்படுவது ஆச்சரியப்படக்கூடியதொன் றல்ல.

எனவே தற்போதய நிலையில் அகழ் வுகள் விரிவாக மேற்கொள்ளப்படாத நிலை நமது மேலாய்வை மையமாகவும் அகழ்வு மேற்கொள்ளப்பட்ட முக்கிய இடங்களில் கிடைத்த தகவல்களை சான்றாகவும் வைத்து

ஆராயும்போது யாழ்மாவட்டத்தில் நடைபெற்ற ஆதிக் குடியேற்றம் அநுராதபுரம், மாந்தை, பொன்பரிப்பு, திஸமகாரகம போன்ற இடங்களில் நடைபெற்ற ஆதிக் குடியேற்றங்களை ஒத்ததே என்பதும் ஆகக் குறைந்தது கி. மு. 5-ம் நூற்றாண்டிலாவது இப்பகுதியின் சில முக்கிய இடங்களில் சங்கத் தமிழரின் மூதாதையரான பெருங் காலபண்பாட்டு மக்கள் வாழ்ந்தனர் என்பது உறுதி.

இத்தகைய ஆதிக் குடியேற்ற தலங்களில் வழுக்கையாறு ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது. கந்தரோடை ஆனைக்கோட்டைத் தொல்லியல் சான்றுகள் யாழ்மாவட்ட ஆதிக்குடியேற்றத்தில் இதுபெற்ற முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. இராசநாயகம் முதலியார் ஞானபபிரகாசர் போன்றோர் கந்தரோடைதான் பண்டைய நாகர்களின் தலைநகர் என்றுகூறிய கருத்தும் கிழக்குக் கரையிலுள்ள சிங்கைநகர் கந்தரோடைக்குப்பின்பு இப்பிராந்தியத்தின் தலைநகரக எழுச்சிபெற்றது பற்றிய செய்தியும் தற்போதைய தொல்லியல் ஆய்வின் பின்னணியில் பரிசீலனை செய்யவேண்டிய கருத்துக்களாக அமைகின்றன. எவ்வாறாயினும் இப்பகுதி ஆதி அரசியல் வளர்ச்சிபற்றியோ அன்றி ஏனைய அரசியல் சம்பவங்கள் பற்றியோ போதிய இலக்கிய ஆதாரங்கள் இல்லாதவிடத்து அறிந்துகொள்வது கடினமாக இருந்தாலும்கூட மகாவம்சத்தில் (கி. மு. 6-ம் நூற்றாண்டு) நாகர் அரசு பற்றிவரும் குறிப்பும் மணிமேகலையில் (கி. பி, 3-ம் நூற்றாண்டு) நாகநாடுபற்றிய குறிப்பும் விசேடமாக மணிபல்லவம் என அழைக்கப்படும் இப்பிராந்தியத்தின் மன்னனான வளைவாணன் மகள் பீலிவளைக்கும் சோழ மன்னன் கிள்ளிவளவனுக்கும் இடையேயுள்ள தொடர்புபற்றி வரும்

நாகநாடு நடுங்கின்றாள் பவன்
வாகை வேலன் வளைவாணன் றேவி
வாகை மயிலை வயிற்றுட் தோன்றிய
பீலிவளை

(மணி – காதை xxiv 11. 54)

குறிப்பும் வசபன் கல்வெட்டில் கி. பி. 2ம் நூற்றாண்டில் அநுராதபுரத்திலாண்ட வசபன் காலத்தில் நாகதீபத்தை அவன் அமைச்சருள் ஒருவனாகிய இசிகிரயன் என்பவன் மாகாண அதிகாரியாக இருந்து பரிபாலித்து வந்த காலத்தில் பியகுகதிசன் என்பவன் ஒரு விகாரை அமைத்ததுபற்றிவரும் செய்தியை நோக்கும்போது இப்பகுதி அரசியல்ரீதியாக தனிப்பிராந்தியமாக விளங்கியது தெரிகிறது. இத்தகைய பிராந்தியம் ஒரு பேரரசு நிலைக்கு எழுச்சி பெறுவிட்டாலும்கூட ஒரு சிற்றரசாக விளங்கியிருக்கலாம். இத்தகைய அரசின் தலைநாராக ஆரம்பத்தில் கந்தரோடையும் பின்பு கிழக்கு கரையில் சிங்கைநகரும் விளங்கியிருக்கலாம் எனக்கொண்டால் பிழையாகாது. ஏன் அநுராதபுர மன்னர் அரசியல் வரலாற்றைக் குறிக்கும் மகாவம்சத்தில்கூட தேவநம்பிய தீசன் ஆட்சிக்குப்பின்பு மூன்று நூற்றாண்டுகட்கு மேலாக இப்பகுதிபற்றி எந்தவித செய்தியும் குறிக்கத் தவறியதில் இருந்தே இப்பகுதி ஒரு தனிப்பிராந்தியமாக வளர்ச்சி பெற்றது என்பது வெள்ளிடைமலை. இத்தகைய சிற்றரசுகள் யாழ்மாவட்டத்தில் மட்டுமன்றி வடமாகாணத்தின் பல இடங்களிலும் குறிப்பாக மாந்தை, வவுனியா, முல்லைத்தீவு போன்ற இடங்களில் வளர்ச்சி பெற்றிருக்கலாம் எனவும் கொள்ளலாம். இவை பெரும்பாலும் அரசியல் ரீதியில் சுதந்திரமாகவே விளங்கியது என்பதை சிங்கள வரலாற்று நூல்களில் வரும் குறிப்புக்கள் மறைமுகமாக எடுத்துக்காட்டுவதோடு ஐரோப்பியர் ஆட்சியிலும் குறிப்பாக 'வன்னிப்பகுதி' சுதந்திர நிலையில் இயங்கிய தன்மையும் சான்று பகர்கிறது. சிங்கள வரலாற்று முதல் மன்னனாகிய தேவநம்பிய தீஸன் கூட வடபகுதிமீது கொண்ட தொடர்பு அரசியல் ரீதியானது அன்று. இது வெறும் கலாச்சார தொடர்பே. இவனுக்குப் பின்பு மூன்று நூற்றாண்டுகளுக்குப் பின்பு கி. பி. 2-ம் நூற்றாண்டில் அநுராதபுர மன்னனாகிய மகல்லநாக, கனிட்டதிஸ போன்றோர் மேற்கொண்ட பௌத்த கட்டிட பணிபற்றியே மகாவம்சம் குறிக்கின்றது. கி. பி. 3ஆம் நூற்றாண்டில் இன்னொரு சிங்கள மன்னனாகிய வொகாரிகதிஸ்ஸ மேற்கொண்ட பௌத்த பணி பற்றிக்

குறிப்பு வருகிறது. (M. V. 33-35) இதன் பின்பு கி. பி. 7-ம் நூற்றுண்டில் அநுராத புரத்தை ஆண்ட இரண்டாம் அக்கிரபோதி இங்குள்ள பௌத்த நிறுவனத்திற்கு மேற் கொண்ட உதவிபற்றிப் பேசப்படுகின்றது. (C.V. 42-62) எனவே வடபிராந்தியத்தைப் பொறுத்தமட்டல் சிங்கள மன்னர் காலா காலங்களில் இப்பகுதியில் தளைத்த பௌத் தத்திறகு அளித்த உதவி பற்றிய சான்றுகள் காணப்படுவதாலும் அரசியல் ஆதிக்கம் பெருமளவுக்கு இவர்களால் மேற்கொள்ளப் படவில்லை என்றே கூறலாம். இதனுல் இப் பகுதி அரசியல் ரீதியில் சிறுசிறு சிற்றரசு களாக இருந்திருக்கலாம் என எண்ணத் தூண்டுகிறது. இலக்கியக் கல்வெட்டு ஆதா ரங்களின் சான்றுகள் இல்லாத நிலையில் முழுக்கமுழுக்க தொல்லியல் சான்றுகளை மட்டும் வைத்துக்கொண்டு இவ்வரசுகளின் அரசியல் வரலாறு பற்றி நாம் திட்டவட்ட மாகக் கூறமுடியாத நிலையில் உள்ளோம். எவ்வாறுயினும் பௌத்த கலாச்சார அலை இப்பகுதி மக்களையும் கவர்ந்தது என்பதற் கான சான்றுகள் உள. இதனுல் ஒரு சில காலங்களில் மட்டும் இப்பகுதி மீது அரசி யல் ஆதிக்கத்தில் அநுராதபுரமன்னர் ஈடு பட்டிருக்கலாம், என்பது தெளிவாகிறது. இதற்குச் சான்றுக கி. பி. 2-ம் நூற்றுண்டில் இங்கு நிலைபெற்ற வசபன் ஆட்சியும் கி.பி. 8-ம் நூற்றுண்டில் அநுராதபுரத்தில் 2-ம் மகிந்தன் ஆட்சிசெய்த போது வட மாகா ணத்தை உள்ளடக்கிய உத்தரபிரதேசத்தில் உள்ள மாவட்ட தலைவர்கள் மேற்கொண்ட கிளர்ச்சி பற்றிச் சூளவம்சம் (C. V. 48; 83-84) தரும் குறிப்பும் அமைகின்றன. வட பிராந்தியம் ஒரு சில காலங்களில் அநுராத புர மன்னர் அரசியல் செல்வாக்குக்கு உட் பட்டிருந்தாலும் பெரும்பாலான காலத்தில் இது சுதந்திரமாகவே விளங்கியது என்பதை அநுராதபுர மன்னர் தொடர்ச்சியாக இப் பகுதிமீது மேற்கொண்ட அரசியல் ஆதிக்கம் பற்றி மகாவம்சம். தீபவம்சம், களவம்சம் போன்ற சிங்கள மக்களின் வரலாற்று நூல் களில் போதிய ஆதாரம் காணப்படாத தொன்றே எடுத்துக்காட்டுகின்றது. இருந் தும் இப்பிராந்திய மக்களின் ஒரு பகுதி யினராவது பௌத்தத்தின் வருகையாலும் பாளிமொழிச் செல்லாக்காலும் தங்கள் மொழி கலாச்சாரத் தனித்துவத்தை முற் ருகப் பேணமுடியவில்லை என்பதை இங்கு காணப்படும் சிங்கள இடப்பெயர்களும் ஆங்காங்கே காணப்படும் பௌத்த சின்னங் களும் எடுத்துக் காட்டுகின்றன. எவ்வாறு யினும் கி. பி. 10ஆம் நூற்றுண்டில் ஏற் பட்ட சோழப் படையெடுப்பு இப்பிராந்திய மக்களை தமிழ் இந்துமத வழியில் முழுக்க முழுக்க நெறிப்படுத்த கி. பி. 13-ம் நூற் ருண்டில் ஏற்பட்ட மாகன் படையெடுப்பு சிங்கள மக்கள் அரசியல் செல்வாக்கிற்கு உலைவைக்க இக்காலம் தொட்டு ஐரோப்பி யர் வரும்வரையும் ஒரு தனித்தமிழ்ப் பேர ரசு நந்திக் கொடியுடன் இப்பிராந்தியத்தில் வளர்ச்சிபெற முடிந்தது.

எவ்வாறுயினும் யாழ். மாவட்டத்தில் நாம் மேற்கொண்ட மேலாய்வு உண்மை யில் மேலோட்டமாகமட்டுமே மேற்கொள் ளப்பட்டவை. தொல்லியல் மேலாய்வு உண் மையில் கால் நடையாக பகுதி பகுதியாகச் சென்று விபரமான தகவல்களைத் தரும்வகை யில் மேற்கொள்ளப்படவேண்டிய ஒன்றே. இத்தகைய விரிவான ஆய்வு நடைபெறும் போது எமக்கு மேலும் மேலும் புதிய தக வல்கள் கிட்டலாம்.

**இக்கட்டுரை யாழ் பல்கலைக் கழகத் தமிழ் மன்றக் கருத்தரங்கில் 16-6-82 ல் கட்டுரை ஆசிரியர் நிகழ்த்திய உரையின் சுருக்கம்.**

# உசாவிய நூல்கள்


அகநானூறு 1961 — மு. காசிநாதச் செட்டியார் பதிப்பு (திருநெல்வேலி)

இந்திரபாலா கா. 1972 — யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம் (கண்டி)

இரகுபதி பொ. 1981 — வீரகேசரி (14-6-1981)

சதாசிவம்பிள்ளை வி. வி. 1884 — யாழ்ப்பாண வைபவம் (சென்னை)

புறநானூறு 1962–64 — சு. துரைச்சாமிப்பிள்ளை பதிப்பு (திருநெல்வேலி)

பெருமபாணாற்றுப்படை 1962 — பொ. வே. சோமசுந்தரரும் பதிப்பு (திருநெல்வேலி)

ஞானப்பிரகாசர் 1928 — யாழ்ப்பாண வைபவ விமர்சனம்

வேலுப்பிள்ளை க. 1918 — யாழ்ப்பாண வைபவ கௌமுதி (வசாவிளான், யாழ்ப்)

மணிமேகலை 1956 — உ. வே. சுவாமிநாத ஐயர் பதிப்பு (சென்னை)

முத்துத்தம்பிப்பிள்ளை அ. 1912 — யாழ்ப்பாணச் சரித்திரம் (யாழ்ப்பாணம்)

ஜோன் என். 1879 — யாழ்ப்பாணச் சரித்திரம் (யாழ்ப்பாணம்)

Begley Vimala 1967
"Archaeological Exploration in Northern Ceylon" Expedition vol. 9 No. 4 Summer 1967. pp 21-29.

,, 1973
"Proto historical material from Sri Lanka (Ceylon) and Indian Contacts' in Kennedy. K. A. R. and Possehl G. L. (ed) Ecological Back grounds of South Asian Pre-history pp 191 - 196.

Boake W. J. S, 1887
"Tirukketiswaram, Mahatirtha, Motoddam or Mantoddai, in J. R. A. S. (C. B.) vol. X No. 35. pp 107 - 114
1888.
Manner A Monograph (Colombo) Chanmugam P. K, and Jayawardane F.L.W. 1954 Skeletal remains from Tirukketswaram in Ceylon Journal of Science, Section G. vol, V Pact-2

Cularamsa 1953
(Trans Geiger. W Colombo.

Deraniyagala S. 172.
The Citadel of Anuradhapura 1969, Excavation In the Gedig Area. Ancient Ceylon No-12. P P 48-62,

Indrapala K. 1981
The Hindu. April 26.

J. R. A. S. (C. B.)
Journal of the Ccylon Branch of the Royal Asiatic Society.

Kennedy K. A. R. 1975
The Physical Anthorpology of the Megalith builders of South India and Sri Lanka (Canberra)

Lewis J.P. 1895
Mannual of the Vanni District (Colombo)
Mahavamsa 1960
(Trans) Geiger W (Colombo)
Meenakshisundaram T. P. 1965
A History of Tamil language (Poona)
Mendis G. C. 1965
The Vijaya legend in Jayawickrama M. A. (Ed.) Paranavitane Felicitation volume (Colombo) PP 263-279
Navaratnam C. S. 1958
Tamils and Ceylon (Jaffna)
Parker H. 1885
Report of the Archacologeical discoveries of Tissmaharama in Th Southern - prvoince in J.R. A. S. (*C. B.*) vIII No. 27 PP 95-192.
Paranavitane C 1961
The Arya kingdom of North Ceylon J. R. A. S. (C. B) N. S. vol. (vii) Part (ii) PP 1-42
1970 Brahmi InscriPtions of Ceylon (Colombo)
Pieris P, E. 1917
Nagadipa and Buddhist remains in Jaffna Part (i) J. R. A. S. (C. B.) vol. (xxvi) No 70. PP 11-67
" 1919
Nagadipa and Buddhist remains in Jaffnaa. Part (ii) J. R. A. S, (C B) vol. (xxviii) No. 72 PP 40-67
Ragupathy P. 1931
Daily News *6-10-1981*
Rasanayagam S *1926*
Ancient Jaffna Madras
Ray H. C. *1959*
History of Ceylon, vol. (i) Part (i) Colombo
Senaratne S. P. F. *1965*
The Later Pre history and Poto-history of Ceylon, some preliminary problems in Journal of the national museum of ceylon vol (i) Part (i) colombo PP (*3-19*)
Shanmuganathan S. *1960*
Excavations at Tirukketiswarm Vaithianthan K (ed.) Tirukketiswaram papers (colombo) PP *83-84*
Sitrampalam S. K. *1980*
The Megalithnic culture of Srilanka
(Unpuplished ph. D Thesis, Poona)

ஈகிள் பிறிண்டிங் வேக்ஸ் லிமிட்டெட்
சிவன்பண்ணை வீதி யாழ்ப்பாணம்